# சுடர்

கலை இலக்கியத் திங்கள் இதழ்

ஐப்பசி - 1976

விலை ரூபா 1-00



கலாநிதியாகும் பண்டிதமணி!

(உள்ளே கோவை குறிப்பு காண்க)

# வாசகர் வாய்மொழி

சுடரின் வெளிச்சம் கண்கூசுகிறது. தமிழ் தலைவர்களுக்குத் திருஷ்டி பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

—க. நல்லதம்பி, க. பெரியதம்பி,
க. சின்னத்தம்பி.
வெள்ளவத்தை கொழும்பு.

* * *

சென்ற இதழில் ஜீ. ஜீ, எஸ். ஜே. வி. இருவரினதும் படத்தை சுடரில் ஒளிபெறவிட்டு தமிழ் மக்களின் பெருமையை பெற்றுவிட்டது.

—சிற். ஸ்ரீ ஜீவா, கொக்குவில் மேற்கு

* * *

அண்ணாவின் சித்தாந்தப்படி யார் எவர் செய்த துரோகங்களையும், "மன்னிப்போம்" "மறப்போம்" "ஒன்றுபடுவோம்" என்று தந்தை செல்வாவையும், 'ஜி. ஜி.' யையும் அருகருகே பிரசுரித்த சுடரோ! 'தொண்டமானை' ஏன் விட்டுவிட்டாய்?

—பு. ர. ஈழமாறன், பண்டாரவளை.

* * *

அப்பப்பா, சிறையில் காசி அண்ணன் பட்ட கஷ்டங்களை நினைக்கவே உணர்ச்சி தோன்றுகிறதல்லவா?

—சி. பரமானந்தன், புங்குடுதீவு-2.

* * *

புரட்டாதி மாதச்சுடரின் அட்டைப்படம் மிகவும் பொருத்தமானது. சந்தர்ப்பத்திற்கேற்ப அட்டைப்படங்களைத் தெரிவுசெய்யும் கோவை அண்ணாவிற்கும் அதனைத் தத்ரூபமாக வரையும் வி. கே.க்கும் எனது பாராட்டுக்கள்.

—செ. தி. ஜெயசீலி,
வித்தியாலங்கார வளாகம், களனி.

* * *

நன்கு அறிமுகமானவர்களினதும் தமக்கு நன்கு ஆலவட்டம் பிடிப்போரதும் ஆக்கங்களையே பிரசுரித்துக்கொண்டு முற்போக்குப் பேசும் இலக்கிய ஆசிரியர்கள் மலிந்த இக்காலத்தில் உங்களுக்கு கொஞ்சமேனும் அறிமுகமில்லாத எனது சகல ஆக்கங்களுக்கும் நீங்கள் அளித்த ஆதரவு என்னைத் திக்குமுக்காடச் செய்கிறது.

—பொன் பூலோக சிங்கம்,
கொழும்பு வளாகம்

ஒற்றுமை வளர்க என்ற தலையங்கம் அருமையாக இருக்கிறது. கோவை குறிப்பில் நேராக நின்று தாக்கும் பண்பு கோவை அண்ணனுக்கு மாத்திரமே உரியது.

—சாந்தையூர் சக்திவேல்
அறிவொளி மன்றம், கொழும்பு-13

* * *

புரட்டாதி சுடரில் வெளிவந்த "நினைவுகள் சாவதில்லை" 'இரண்டு தலைமுறைகள்' ஆகிய இரண்டு சிறுகதைகளும் என்னை மிகவும் கவர்ந்துவிட்டன. சாதிப் பாகுபாடு காட்டுபவர்களுக்கு இக் கதைகள் சரியான சவுக்கடியாகும்.

—ஏ. கே. அப்துல் ஹக்.
பெரிய பள்ளி வீதி, புத்தளம்.

* * *

சம்மாந்துறையில் 'சுடரை' விற்பனை செய்ய ஒழுங்குகள் செய்ய முடியாதா? தித்திக்க தித்திக்க தெவிட்டாத சுடரை வாங்க கல்முனை போவது சிரமமாயிருப்பதுடன், போவதற்கிடையில் சுடர் விற்பனையாகிவிடுவதால் ஒழுங்குகள் செய்யவும்.

—பி. எம். மன்சூர், சம்மாந்துறை-2

* * *

சென்ற இதழில் வெளிவந்த கோவை குறிப்புப் பகுதி என் நெஞ்சை நெகிழச் செய்துவிட்டது. பேனாவை எடுத்து எழுதுவது மட்டுமன்றி, களத்திலும் இறங்கிக் கருத்துப் போர் செய்து தமிழினத்தின் எதிரிகளைப் புறங்கொள்ளச் செய்யும் கோவை அண்ணாவின் செயல் வீரத்தை மறக்கவே முடியாது.

—ஆ. சேயோன், பண்ணாகம்.

* * *

சென்றமாத கோவை குறிப்பில் "சிலோன் ஒப்சேவர்" ஆசிரியருக்கு நீங்கள் கொடுத்த தகடு மிகவும் நன்று. இந்தியப் பத்திரிகையாளர்கள், இங்குள்ள சிங்கள வெறியர்களின் திமிரை நேரிலேயே, அறியக்கூடியதாக, நீங்கள் எடுத்துரைத்ததில், தமிழ் மக்களின் இன்னல்களை அவர்கள் அறியத்தக்கதாக இருந்தது. உங்களின் இத்தகைய துணிச்சலினால் தமிழர் நிச்சயம் விமோசனம் அடைவார்கள். தமிழுக்கு என்றும் வாழ்வுண்டு.

—ச. ஸ்ரீஜெயந்திநாதன், கட்டுடை.

* * *

சத்தியத்தின் உறுதியோடு சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த காசி அண்ணாவை ஒரு தேனினுமினிய அன்புக் கட்டளை அடிபணிய வைத்ததென்றால் அது நம் தந்தையின் கட்டளைதான். காசி அண்ணாவின் வாய்ப் பேச்சுக்கு உயிரோவியம் கொடுத்த கோவை அண்ணாவுக்கும் நன்றி.

—இ. பிரேம்குமார், நாவலப்பிட்டி

* * *

கே. எஸ். ஆனந்தன் எழுதும் தொடர் நவீனமான சாத்தான் வேதம் ஓதுகின்றது கதையில் விறுவிறுப்பையே காணவில்லையே!

—செல்வி ஆர். சரஸ்வதி, சாவகச்சேரி.

# சுடரே நின் வடிவம் கண்டேன்!

—காசி ஆனந்தன்

செங்கதிரோன் ஒளிச்சுடரே!
ஒளிச்சுடர் புன்னகைக்கும்
சித்திரப் பூஞ் செங்கமலமே!
திங்களெனும் எழிற் பிழம்பே!
திங்களொடும் எழில் வெள்ளம்
திகழ எழும் வெள்ளிப்பூவே!
பொங்க வரும் புனிர் புனலே
குளிர் புனலில் நீராடும்
புதுத் தென்றல் இளங்காற்றே
சங்கமணி முத்தமே!
பவளமே வைரமே!
சத்திசாயீசமணியே!

வித்தாய் எனத் தந்தை
விதைக்க அவ்வித்தினை
விருட்சமாய்ச் செய்த இறைவா!
பத்துத்திங்கள் தாயார்
பசுங்கருவில் அடியேனை
படைத்துலகில் விட்ட முதல்வா
அத்தா! எனை நேரில்
ஆளவும் அணைக்கவும்
அவதாரம் எடுத்த தலைவா!
தத்துவப் பெரும் பொருளே
தவத்தர் தவக்கொழுந்தே
சத்தி சாயீசமணியே.

ஆரமுதே எஜ்னையா
அடியேனைப் படைத்துலகில்
ஆட நீ விட்டபின்பும்
தூர விட்டோடினுய்
அல்லை நீ துணை நின்ருய்!
தொடர்ந்து நீ கூடவந்தாய்!
பேரருட் பெருங்கடலே
நாயேனைப் பிழைகளைந்து
பேணிநின்ற என்பெருமானே!
தாரணி வாழ்பரம் பொருளே!
தரைபடிந்த வெண்முகிலே!
சத்தி சாயீசமணியே!

இனிய வான் நாட்டினுய்
இனிய முகம் காட்டினுய்
என்னுள் ஒளிக்கனல் மூட்டினுய்!
மனித வடிவேற்று நீ
மனிதனெனை மாற்றினுய்
மாதேவா காப்பாற்றினுய்!
புனித நீராட்டினுய்
பொன்னினுய் என்னை நீ
புதுவீணையாய் மீட்டினுய்!
தனியழகுப் பேரெழிலே
தன்னிகரிலா முதலே
சத்தி சாயீசமணியே!

மூத்தபுவி இடை முளைத்தோர்
பலர் முன்னம் போனவழி
முடக்குவழி நானும் போனேன்!
காத்தருள நீ இருந்தாய்
என் இறைவா கை கொடுத்தாய்!
கடவுளே யான் பிழைத்தேன்!
நாத்திகனுய் இருந்தேனை
நின்னருளால் நின்னடிகள்
நம்பவைத்த ஞான வடிவே!
சாத்திரமே! மாமறையே!
தோத்திரமே! என் இறையே
சத்தி சாயீச மணியே!

நிகரில்லா எழில்ஞாலம்
காட்டினுய் நிறைசோதி
நின்னெழில் கண்டேன்! கண்டேன்!
அகமெலாம் இழுக்கின்ற
அழகெலாம் நீ யாகி
அடியேனை மயக்கக் கண்டேன்!
சுகநிலா பூம்பொழில்
மணித்தென்றல் அனைத்திலும்
சுடரே நின்வடிவம் கண்டேன்
அகமெலாம் நிறைதேனே!
அகத்தின் உயிர்ச் சாறே!
சத்தி சாயீசமணியே!

மாயா வாழ்வெனச் சொன்னுர்
இவ்வையம் மாயையாம்!
மானுடம் வெறும் மாயையாம்!
சாயாடும் முலை மாதர்
பூமேனி மாயையாம்
காதலும் வெறும் மாயையாம்!
தூயோய் மண் எங்கணும்
நீயே தோன்றலால் மாயை
தோன்றவோர் இடமுமுண்டோ?
தாயான செல்வமே!
தரணிவாழ் தெய்வமே!
சத்திய சாயீசமணியே!

இன் னெழில் ஞாலத்தில்
இயல்கின்ற எழிலெல்லாம்
என்றென்றும் எழில் மெய்யே!
கன்னியர் எழில் மெய்யே!
காதலின் சுவை மெய்யே!
கவிஞர் செந்தமிழும் மெய்யே!
பொன்னும்மெய்! மணியும்மெய்!
புவிவாழ்வின் எழிலும்மெய்
பொய்யுமோர் இனியமெய்யே!
தன்னெழில் மெய் யெங்கும்
காட்டும் தனிமெய்யே!
சத்தி சாயீசமணியே!

வானும் நீ மண்ணும் நீ
லழியும் நீ தடையும் நீ
வாழ்வும் நீ சாவும் நீயே
ஊனும் நீ உயிரும் நீ
உள்ளும் நீ புறமும் நீ
உளதும் நீ, இலதும் நீயே
நானும் நீ, நீயும் நீ
நாளும் நீ கோளும் நீ
நாற்றிசைப் பொருளும் நீயே
தானும் நீ பிறவும் நீ
என நின்ற தன்மையே
சத்தி சாயீசமணியே!

# கோவை குறிப்புக்கள்

தமிழகத்தின் தனிப்பெரும் எழுத்தாளர்களில் ஒருவரான அன்பர் அகிலன் அவர்களுக்கு 1975ம் ஆண்டுக்கான இந்திய ஞானபீட விருது கிடைத்திருக்கிறது. இந்திய ஞானபீட விருதுபெற்ற முதல் தமிழ் எழுத்தாளர் என்ற பெருமையை இதன்மூலம் திரு. அகிலன் பெறுகிறார். ஓர் இலட்சம் ரூபாவும், சான்றிதழ் ஒன்றும், இந்தியத்தாயின் உருவச் சிலையொன்றும், ஞானபீட விருதுகளாக அகிலனுக்கு வழங்கப்படவிருக்கின்றன. அவர் எழுதிய பாவைவிளக்கு, வேங்கையின் மைந்தன் போன்ற நாவல்கள் மக்கள் நெஞ்சில் அழியா இடம்பெற்றவை.


அன்பர் அகிலன் அவர்கள் அமைதியும், அடக்கமும் நிரம்பப்பெற்றவர்; எழுத்துப் பணியை உயிரெனக் கருதுபவர்; எல்லாவற்றிற்கும் மேலாக சிறந்த பண்பாளர். காந்திய நெறியில் ஊறித் திளைத்தவர்; அவரது அமைதியான எழுத்து நடையிலிருந்தே அவர் எத்தகைய பண்பாளர் என்பதை ஒருவர் புரிந்துகொள்ள முடியும்.

தனக்கென 'கிளிக்' சேர்த்துக்கொண்டு இலக்கிய உலகின் ஜாம்பவான் தானேயென டமாரமடிப்பதோ அல்லது முற்போக்கு, பிற்போக்கு, யதார்த்தம் என்பனபோன்ற சொற்சிலம்பச் சிக்கல்களுக்குள் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு அவர் அவஸ்தைப்படுவதோ கிடையாது. தனக்கென தனிவழியிற் செல்பவர் அகிலன் அவர்கள்.

இத்தகைய ஒரு தமிழ் எழுத்தாளருக்கு ஞானபீட விருது கிடைத்ததை ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் அமைப்பான எழுத்தாளர் பேரவை வரவேற்றுப் பாராட்டி வாழ்த்தியுள்ளது அகிலன் தனது இலக்கியப் பணியை மேலும் தொடர அவருக்கு கிடைத்த ஞானபீட விருது மேலும் ஊக்குவிக்குமாக.

* * *

ஆறுமுகநாவலருக்குப் பின்னர், அவரது வழி நின்று தமிழ் இலக்கியத்துக்கும் சைவ சமயத்துக்கும் அரும்பணியாற்றி வருபவர்களில் முதன்மையாகக் குறிப்பிடத் தகுந்தவர் பெரியவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். பண்டிதமணியினுடைய கருத்துக்கள் பழைமையானவையென்று கூறி ஒதுக்கக்கூடிய நவீன இலக்கியவாதிகள்கூட அவருடைய தமிழ்ப் புலமையையும் இலக்கிய ஞானத்தையும் ஏற்றிப் போற்றவே செய்வர். முது நிலையடைந்து தளர்ச்சியடைந்துள்ள போதிலும் இன்றும் தமிழை மறவாமற் பணி செய்யும் அப்பெருந்தகையாளர், இந்திய நூல்கள் இறக்குமதியைத் தடைசெய்வது அறிவுக்கு விதிக்கப்படும் தடையென்று அழுத்தம் திருத்தமாக எதிர்த்து நின்றவர். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை மூடிய அரசின் சைவ சமய விரோதச்செயலைக் கண்டு மனம் நொந்து அதைச்சாடி நின்றவர் அவர்.



பண்டிதமணிக்கு இப்போதுதான் 'டாக்டர்' பட்டம் கொடுக்க இலங்கைப் பல்கலைக்கழக ஆளுனர்சபை முடிவு செய்துள்ளது. என்றோ செய்திருக்கவேண்டியதை — பண்டிதமணி தமிழனாகப் பிறந்த காரணத்தினால் போலும் — காலங்கடந்து இப்போதுதான் செய்ய முன்வந்திருக்கிறது பல்கலைக்கழக ஆளுனர் பேரவை. எப்படியோ—பண்டிதமணி உயிரோடு இருக்கும்போதாவது இதைச் செய்ய அவர்களுக்கு மனம்வந்ததே—அதற்காகப் பாராட்டலாம்.

பொதுத் தேர்தல் ஒன்று வரப்போகும் சமயத்தில்—தமிழறிஞர்களை இந்த அரசு கௌரவிப்பதாக ஒரு போலி நடிப்பாக இது இருந்தபோதிலும்— தமிழ் பேரறிஞர் ஒருவர் மதிக்கப்படுவது பெருமகிழ்ச்சிக்குரியதே. தமிழ் ஈழத்தின் ஆட்சி தமிழர்களின் கையிலிருந்திருந்தால் பண்டிதமணிக்கு 'டாக்டர்' பட்டம் மட்டுமல்ல அதையும்விட கௌரவங்கள் என்றோ கிடைத்திருக்கும்.

* * *

படித்தவர்கள் கூட எழுதும்போது, சில சொற்களை எப்போதும் தவறாகவே எழுதிவிடுகிறார்கள். இளம் எழுத்தாளர்களும் மாணவர்களும் அதே பிழையைத் தாராளமாகச் செய்கிறார்கள். உதாரணமாக, ஆராய்ச்சி என்பதற்குப் பதிலாக "ஆராட்சி! என்று எழுதுகிறார்கள். "நிச்சயம்" என்பதற்குப் பதிலாக "நிட்சயம்" என்று எழுதுகிறார்கள். தமிழை ஒழுங்காக பாடசாலைகளில் சொல்லிக் கொடுக்காததனாலும், தமிழ் இலக்கணம் பயிற்றுவிக்கப்படாததனாலுமே, இவ்வாறு தமிழைத் தவறாக எழுதுகிறார்கள். மொழியை ஒழுங்காக நாம் படித்தால்தான் நம்மொழியின் அருமை நமக்குப் புரியும். அப்போதுதான் அந்த மொழி மீது நமக்கு மேலும் பாசமும் பற்றும் அதிகரிக்கும். எனவே பேனாவை எடுத்து எழுதத் தொடங்குவதற்கு முன் எழுத்தார்வமுள்ளவர்கள் முதலில் மொழியை முறையாகப் படிக்கத் தொடங்க வேண்டும்!

# சுடர்
CHUDAR

(கலை இலக்கியத் திங்களிதழ்)

வள்ளுவராண்டு 2007
ஐப்பசி — 1976
சுடர் — இரண்டு
ஒளி — ஏழு

ஆரம்பம்: சித்திரை 1975
வெளியிடுபவர்கள்:

சிலோன்நியூஸ்பேப்பர்ஸ்லிமிடெட்
194, ஏ. பண்டாரநாயகா வீதி
கொழும்பு-12.

விலை: தனிப்பிரதி ரூபா 1-00
ஆண்டுச் சந்தா: ரூபா 12-00
அரையாண்டுச்சந்தா ரூபா 6-00


## உள்ளே


சிறுகதைகள்
- * உணர்வுகள் விழிக்கட்டும் —தமிழ்ப்பிரியா
- * பகல் ஷோ —சித்தி
- * அத்துமீறல் —பொ. சண்முகநாதன்

நெடுங்கதை
கே. எஸ். ஆனந்தன்

கட்டுரைகள்
காண்டேகர்
பாரதியும் அகவலும்
தமிழக நினைவுகள்

கவிதைகள்
காசி ஆனந்தன்
ஈழத்துக் கவிஞன்

செவ்வி:- ஆனந்தன்

உருவகம்
நாக. பத்மநாதன்

குட்டிக் கதை
செ. குணரத்தினம்

மற்றும் கோவைக் குறிப்புக்கள்
துணுக்குகள்,
வத்தியக் கட்டுரை.


# தலையங்கம்

## கூட்டணி வேட்பாளர்கள்!

பொதுத் தேர்தல் வருமா வராதா என்ற கேள்விக்குறியொன்று இலங்கையின் அரசியல் வானில் பூதாகரமாக எழுந்து— இப்போது நிச்சயமாக தேர்தல் வந்தே தீரும் என்ற சூழ்நிலை தோன்றியிருக்கிறது.

தமிழ் ஈழத்தின் விடுதலைப் பேரியக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை பொதுத் தேர்தல் பற்றி அக்கறையில்லையென்றாலும்— தேர்தல் நடைபெறுமானால் தமிழ் ஈழக் கொள்கையை முன்வைத்து அது போட்டியிடத்தான் போகிறது!

அப்போது கூட்டணி நிறுத்தவிருக்கும் வேட்பாளர்கள் எப்படியிருக்கவேண்டுமென்று 'சுடர்' தனது கருத்தை இப்போதே கூறிவைக்கவிரும்புகிறது!

கூட்டணி நிறுத்தவிருக்கும் வேட்பாளர்கள் தேர்தலுக்குத் தேர்தல் மட்டும் தமிழ் மக்களிடையே தலை காட்டுபவர்களாக இருக்கக்கூடாது! தேர்தலுக்காக கூட்டணியில் வந்து ஒட்டிக்கொண்டவர்களாகவும் இருக்கக்கூடாது!

தமிழ் ஈழ விடுதலையொன்றையே தமது இலட்சியமாக விசுவாசத்துடன் ஏற்று, அதற்காக தம்மை முழுமையாகப் பரித்தியாகம் செய்யவும், மக்களுடன் மக்களாக நின்று, அவர்களது வாழ்விலும் தாழ்விலும் பங்கேற்று, விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக முன்னெடுத்துச் செல்லவும் கூடியவர்களாக இருக்க வேண்டும்!

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர்களாக— போலித்தனங்களற்றவர்களாக— இடைநடுவில் இலட்சியத்தையும் இயக்கத்தையும் காட்டிக்கொடுத்துவிட்டு ஓடாதவர்களாக— பதவிகளுக்கும் சலுகைகளுக்கும் மயங்காதவர்களாக— இருக்கவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக கூட்டணியின் தலைமையை ஏற்று, அது இடும் கட்டளைகளுக்கு பணிந்து நடப்பவர்களாக இருக்கவேண்டும்!

தமிழ்ஈழ இலட்சியத்தில் ஊறியவர்களாக— தமிழர் விடுதலை போராட்டங்களில் பங்கேற்றவர்களாக— இருக்க வேண்டும்!

கூட்டணியின் வேட்பாளர் நியமனக் குழு, துலாக்கோல் போல் நடுநிலை நின்று, தான் நியமிக்கவிருக்கும் வேட்பாளர்களின் கடந்தகால அரசியல் நடவடிக்கைகளை சரியாக எடைபோட்டு— தக்கவர்களை தகுந்தவர்களை தமிழ் மக்களுக்குத் தரவேண்டும்!

இதை இப்போதே சொல்லிவைக்க விரும்புகிறோம்.

இந்த ஆண்டு செப்டம்பர் 2-ம் திகதி காலமான மராட்டிய எழுத்தாளர் விஷ்ணு சக்மகம் காண்டேகர் அவர்கள் கலையை மக்களின் வாழ்வுக்காகவே பயன்படுத்தியவர். 1959-ம் ஆண்டு தமது 'யயாதி' என்ற நெடுங்கதைக்காக ஞானபீட பரிசாக ரூபா ஒரு இலட்சம் பரிசு பெற்றவர், தமது கண்ணை இழந்து குருடராகவே தமது வாழ்வின் இறுதி நாட்களைக் கழித்த நேரத்திலும் தமது இலக்கியப் பணியை இடைவிடாது ஆற்றியவர்.

# காண்டேகர்

எழுதுகோலைப் பிடித்தவர்கள் எல்லோரும் எழுத்தாளராக ஆகிவிட முடியாது. அப்படி எழுத்தாளர் எனச் சொல்லப்படுகிறவர்கள் எல்லோருமே எழுத்தை— ஆள்பவர்கள் என்றும் சொல்ல முடியாது.

எத்தனையோபேர் எழுத்தின் அழகு — அழுத்தம்— ஆக்கம் — நோக்கம் எதையுமே ஆய்ந்து பாராமல் ஆழ்ந்து நோக்காமல் தங்கள் இச்சைப்படியெல்லாம் எழுதுகோலை கொச்சைப்படுத்துவதையும் நாம் பார்க்கிறோம்.

சுவரிலே சுண்ணும்பை அடிக்கின்ற மட்டைத் தூரிகையும், திரையிலே வண்ண ஓவியம் வடிக்கின்ற இறகுத் தூரிகையும் ஒன்ருக முடியுமா?

காண்டேகரோ வண்ண ஓவியங்களைத் தீட்டும் இறகுத் தூரிகையாக எழுத்துக்களை மிக நுணுக்கமாகக் கையாண்டார். அவர் உண்மையான எழுத்தை ஆள்பவராக விளங்கினுர். அதனுல் எண்ணற்ற இதயங்களை ஆள்பவராகவும் உயர்ந்தார்.
சிலர் பொழுதைப் போக்க மட்டுமே எழுதுகோலைப் பிடிப்பார்கள்.

சிலர் அழுகல்களையும் அருவருப்புகளையும் அப்படியே படம்பிடிப்பதுதான் உண்மைநிலை ('ரியலிசம்') இலக்கியம் என்று மார்தட்டுவார்கள்.

ஆனுல் காண்டேகரோ அந்தக் கோணல் வழிகளிலே அடியெடுத்து வைக்க நாணுகின்ற நன் மனிதர்.

அவரது கை ஏந்தியிருந்தது வெறும் எழுதுகோலை அன்று; இலட்சிய விளக்கை!

அவரது கால் நடந்து சென்றது புல் மண்டியிட்ட பழைய தடத்திலே அன்று; புதியதோர் புரட்சிப் பாட்டையிலே!

அவரது கண் தேடியது பழைமை என்னும் வளைகளை அன்று; வானளாவும் புதுமை மாளிகைகளை!

"ஓர் எழுத்தாளன் என்பவன் சமுதாயத்தின் தோழனுகவும், வழிகாட்டும் துணைவனுகவும் திகழவேண்டும்!" என்று வன்மையாக வாதிட்டவர் காண்டேகர்.

ஓர் இலக்கியம் காலத்தை வெல்லும் கற்பனைக் கடலாகக் கருத்தைக் கவர்வதற்கு — அதிலே உவமை அலைகள் நிரம்பிக் குதித்த வண்ணமே இருக்கவேண்டும்.

திருவள்ளுவரின் 'திருக்குறள்' ஆயினும், கவுதம புத்தரின் 'தம்மபதம்' ஆயினும், இராமலிங்க அடிகளின் 'திருவருட்பா' ஆயினும் இராமகிருட்டின பரமஹம்சரின் 'உபதேச மஞ்சரி' ஆயினும் அவை உள்ளத்தைக் கொள்ளை கொள்வதற்கு அவற்றில் மின்னும் உவமை அணிகளும் பெரும் பங்கை ஏற்கின்றன.

தன்மான இயக்கத்தைச் சார்ந்த இலக்கியச் சிற்பிகளின் தனித்தமையைப் பறைசாற்றுவதும் அவர்கள் பொழிந்து தள்ளியுள்ள உவமைப் பூக்களே!

தமிழகத்தில் மறுமலர்ச்சியை உருவாக்க முனைந்த இந்த இலக்கியச் சிற்பிகளைப் போலவே— மராட்டியத்தில் மறுமலர்ச்சியை உருவாக்க முயன்ற காண்டேகரும் உவமைச் சுரங்கமாகவே ஒளிவீசினுர்.

அந்த உவமைச் சுரங்கம் உதிர்த்துச் சென்றுள்ள தத்துவ முத்துக்கள் தாம் எத்தனை, எத்தனை!

"தாயின் பார்வைக்கு இருக்கும் வலிமை மனைவியின் வாய்க்கு இருப்பதில்லை" — என்று அன்னையின் ஆற்றலை அளந்தவரும் அவரே!

"மலர்களின் இதழ்கள் உதிர்ந்து விடுகின்றன; பிறகு எஞ்சுவது அவற்றின் முள்தான்; காதலும் இப்படித்தானு?" என்று காதலரின் ஏக்கத்தை எழுதி எதிரொலித்தவரும் அவரே!

"இந்த உலகில் பிறப்பையும் சாதியையும் சார்ந்து எதுவுமே இருக்கலாம். அரச கன்னிகை தீயவளாக இருக்கலாம்; பணிப்பெண் நல்லவளாக இருக்கலாம்"— என்று சமுதாய மேடு பள்ளங்களைச் சாடியவரும் அவரே!

"துயரத்துக்கு மிகச் சிறந்த மருந்து ஏதாவது ஒரு கலையில் மனதைச் செலுத்துவதுதான்" — என்று புயலில் சிக்கியவர்களுக்கு ஆறுதல் கூறியவரும் அவரே!

# மனித வாழ்வின் இலட்சியம்!

"ஆண் பெண்களுக்குப் பரஸ்பரம் உண்டாகும் கவர்ச்சி, பற்று, சந்திப்பு என்னும் விஷயங்கள் வெறும் சுகபோகங்களல்ல; முயற்சியினல் அவை தடுக்கக்கூடியனவும் அல்ல. இத்துடன் நில்லாமல், இவ்விஷயங்களிலிருந்து, நிவிருத்தி பெறுவது பயன் தரக்கூடியது என்று கருதுவதே இயற்கைக்கு மாறுனது. ராமதாசரையும் விவேகானந்தரையும் போன்ற மகாபுருஷர்களின் வாழ்க்கைக்கு இந்த நிவிருத்தி பயன் தந்திருக்கலாம்! ஆனல் மகாபுருஷர்களின் வாழ்க்கைச் சட்டத்தைச் சாமானிய மனிதர்களின் வாழ்க்கையுடன் பொருத்தி அவர்களுக்கு வழிகாட்டுவது மனிதத்தன்மையை ஏமாற்றுவதாகும். சூரியனுடைய கதியின் விதிகளேயே வேறு கிரகங்களுக்கும் யாராவது விதிக்க முடியுமா? மனிதன் மிருகமும் அல்ல; தெய்வமும் அல்ல. அவன் வழுக்கி விழுந்துவிட்டானுனல் மிருகத்திலுங் கெட்டவனுக நடந்துகொள்கிறன். வானத்தைத் தொடும் நீண்ட உயர்ந்த சிகரத்தை அவனல் எட்ட முடியுமானல் தேவர்களுக்கும் அசாத்தியமான குணங்களே அவன் வெளிப்படுத்த இயலுமென்பது உண்மைதான். ஆனல் ஒவ்வொரு சாமானிய மனிதனும் தேவனுக முடியுமென்றே, மனிதன் மனித நிலைக்கு மேம்பட்டவனுவதுதான் அவனுடைய வாழ்க்கையின் இலட்சியமாக இருக்கவேண்டுமென்றே இதற்கு அர்த்தமல்ல."

—அண்மையில் அமரரான மராட்டிய எழுத்தாளர் காண்டேகர் அவர்களின் 'கருகிய மொட்டு' என்ற தமிழ் நூலின் அறிமுகத்திலிருந்து (தகவல் —சதாமணி)

---

"மனிதன் தன்னே அறியாமலே தன்னேச் சுற்றியே வளேயவருகிறன். பல ஊர்களே நீர்மயமாக்கி நெடுந்தூரம் பிரளயமாகப் பரவும் பெருவெள்ளத்தைக் காட்டிலும் தன் கண்ணில் வடியும் நீர்தான் அவனுக்கு அதிக முக்கியத்துவமாகத் தோன்றுகிறது." என்று தன்னலப் போக்கின் புன்மையைக் காட்டியவரும் அவரே!

"மாந்தரின் உண்மையான எதிரி விதியல்ல; மாந்தரே!" என்று விதியின்மீது பழி போட்டுத் தப்பிக்கின்றவர்களுக்கு அறைகூவல் விடுத்தவரும் அவரே.

—இன்னும் எத்தனே எத்தனேயோ மாணிக்கப்பரல்களேயெல்லாம் காண்டேகரின் கற்பனேச் சிலம்பிலிருந்து காட்டிக் கொண்டே செல்லலாம்.

எழுத்தாளனுக ஏற்றம் பெற விழைகின்ற ஒருவன், தான் வழுத்தி வழிபடக்கூடிய வழிகாட்டிகளாகத் தன் இதய பீடத்திலே சிலரைக் கொலுவேற்றிக்கொள்வதும் இயற்கையே!

காண்டேகர் நெஞ்சத்தை அவ்வாறு கவர்ந்தவர்கள் ஜி. ஜி. அகர்கார், ஹரி நாராயண் ஆப்தே, எஸ். வி. கேட்கர், வி. எம். ஜோஷி, டால்ஸ்டாய், ஆண்டன் செகாவ், கலில் கிப்ரான் முதலானேர் ஆவர்.

ஆனல் கற்பனேக் கடலாம் காண்டேகரே—பல எழுத்தாளர்களுக்கு இன்று கலங்கரை விளக்கமாக வழிகாட்டுகிருர் என்பதை யாரே மறுக்க முடியும்?

அவரது இமைக் கதவுகள் மூடியிருக்கலாம்.

ஆனல் அவரது எண்ணக்கதவுகள் என்றைக்குமே இந்த மண்ணில் மூடமாட்டா!

"பசும்பயிர் செழித்த பூமியைப் போல கருத்தரித்த மங்கையின் எழிலே விந்தையானது!

—காண்டேகர் காட்டிய அழகின் சிரிப்புத்தான் இந்த உவமை ஓவியம்!

அந்த அழகின் சிரிப்பு அவரது படைப்புகள் எல்லாவற்றிலுமே பரந்து ஒலிக்கிறது.

அந்த இனிமையான இனிய ஓசை என்றைக்குமே ஓயாது!

ஆயினும் அவரது மறைவை நினேக்கும் பொழுது அவரது கலேமிளிரும் கவிதை வரிகளே நம் நெஞ்சில் அலேகளே எழுப்புகின்றன.

"......உள்ளே என் மனம் வதங்கிவாடியிருக்கிறது — உலர்ந்துவிட்ட பவழமல்லிகை மலர்போல்! வெளியே மயக்கமூட்டும் குயிலின் கீதம் கேட்கிறது! என் உள்ளத்திலோ உடைந்த வீணேயின் குரல் எழுகிறது!"

பவழ மல்லிகை உலர்ந்து உதிரலாம். குயிலின் கீதம் மறைந்து போகலாம். வீணேயின் குரல் உடைந்து ஒடுங்கலாம்!

ஆனல்...... காண்டேகர் எனும் அந்தப் பரந்த கற்பனேக் கடல்...... அதிலே துள்ளிச் சிரிக்கும் உவமை அலேகள்........... அவற்றுக்கு இறப்பு ஏது?

—அரிமா

# முட்டைத் தத்துவம்

— நாக. பத்மநாதன் —

அது கிராமத்தின் தெரு வோரத்திலுள்ள ஒரு கோழிப் பண்ணை. அங்கு வந்து போவோர் பலர்; கோழிகள் ஏராளம்; முட்டைகளும் பெருந்தொகை!

அந்த முட்டைகளுட் சில தம்மிடையே நன்ருகக் கதைத்துக்கொள்ளும். அவற்றின் கதை வெளிக்குத் தெரியாது, எவருக்கும் கேட்காது— அத்தகைய உள்ளுணர்வுடன் கூடிய அந்தரங்கப் பேச்சு அது!

அதில், மனித கை பட்ட அந்த முட்டையொன்றுக்கு தன்னை மறந்த பெருமை! பெரிய இடத்துச் சகவாசம் தனக்குக் கிடைக்கும், எங்கேனும் போய் பெரிய "கேக்" ஆக இருப்போம், என்ற பெருமையில் அது மிதந்து கொண்டிருந்தது!

"25 சதத்துக்கு வாங்கப் பட்டு, 40 சதத்துக்கு விற்கப் பட்டு, எவ்விதமேனும் 15 சதத்தைத் தேடிவிட்டே போகவேண்டும்." இது இன்னெரு முட்டையின் இலட்சியம்!

"கலங்காமல் இந்தக் கண்ணுடிப் பெட்டிக்குள் இருப்போம். காசாஞல் என்ன?" கறியாஞல் என்ன இவ்விதம் பத்திரமாய் உட்கார்ந்துகொண்டன இன்னும் சில!

"அது என்னவாம்?"

ஏக மனதாகக் கேட்டன அத்தனை முட்டைகளும். கோடிப் பக்கத்து அறையொன்றில் இருந்த முட்டையைப் பற்றித்தான் அவை ஆராய்ந்தன.

"முட்டையா அது?"

"பிறந்து எட்டு நாளாகிவிட்டன. இன்னும் அங்கு அழுக்குப்படக் கிடக்கிறது."

"தாயின் இருளிலே மறைந்து கிடக்கிறது."

"அது மட்டுமா? உள்ளே கலங்கிக் கொண்டும் இருக்கிறது."

"இவ்விதம் உள்ளே கலங்கி என்ன பயனும்?"

"கூழாவதுதான் பயன்!"— எல்லா முட்டைகளும் ஏகப்படச் சிரித்தன!

நிழல்— ஒளித் திரையிலே நாட்கள் விரைந்து ஓடின.

பத்து நாட்கள் செல்லுமுன் பெரிய மோட்டார் காரில் சென்று பெரிய "கேக்" ஆகிற்று ஒரு முட்டை.

இன்னும் இரண்டு நாட்களுள் 15 சதத்தை உழைத்துவிட்டு மறைந்தது வேருென்று.

கலேஞனின் தூரிகை பட்ட வண்ண அலங்காரக் கோதாகி நின்றது மற்ருென்று.

மேலும் நாட்கள் ஓடின; ஓடிவிட்டன.

இப்போது அந்த அடை முட்டை தன்னுள் உருமாறி உடைந்த பழம் கோதாகி குப்பை மேட்டில் கிடக்கிறது. ஆனல், அது உலகுக்கு அளித்த இளம் சேவற் குஞ்சொன்று நெஞ்சை நிமிர்த்தி குரல் கொடுத்துக் கூவத் தொடங்குகிறது.

"நாம் வாழ்வோம்! எம் இனம் வாழும்!" என்ற கீதம் அதன் குரலிலே எழுந்து பரந்து மிதக்கிறது.

---

# கிராமத்தில் தமிழ்ப்பற்று!

வடமுனை என்பது மட்டுநகரின் வடபுறம் உள்ள ஒரு குடியேற்றக் கிராமம். இங்கு வாழும் மக்கள் படிப்பு வாசனையற்ற விவசாயிகள். அநேகர் சேனைப் பயிர் செய்து வாழ்பவர்கள். இவர்களுக்கு அண்மையில் ஒரு பாடசாலை அமைத்துக்கொடுக்கப்பட்டது. இப்பாடசாலையில் இருந்து நகர்ப்புற பஜனை நிகழ்ச்சிக்கு வந்த ஒரு மாணவன் மிக அற்புதமாகப் பாடினன். உணர்ச்சிவசப்பட்டுப் பாடினன். நிகழ்ச்சி முடிவில் அம் மாணவனை அழைத்து "உன் பெயர் என்னப்பா?" என்று வினவினேம். அதற்கு அம் மாணவன் "தமிழன்பன்" என்று கம்பீரமாகக் கூறினன். எங்களுக்கு மெய் சிலிர்த்தது. அந்தப் பிற்போக்கான காட்டுக் கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஒரு தந்தையின் உள்ளத்தில் தன் மகனுக்கு "தமிழன்பன்" என்று பெயர் வைக்கத் தோன்றியதே என்ற வியப்பு எங்களை அப்படியே மலைக்கச் செய்துவிட்டது.

தகவல்:- "மணி"

---

# தமிழக நினைவுகள்!

## கூடலைக் கூடினோம்!

மதுரை மாநகரின் புகழ்மிக்க வைகை நதி முன்னொருமுறை அணையுடைத்து பெருக்கெடுத்து மதுரை மாநகரத்தையே அழிக்க முயன்றதாம். திருவாசகம் தந்த மணிவாசகப் பெருந்தகையை பாண்டியன் சிறையில் அடைத்துத் துன்புறுத்தியபோது—அந்தத் தவ முனிவர் படும் துன்பங்கண்டு பொறுக்கமுடியாமல்தான் இயற்கை சீறி—அதன் பயனாக வைகை உடைப்பெடுத்ததாம். இதை உணர்ந்த பாண்டிய மன்னன் தன் செயலுக்காக வருந்தி மணிவாசகரை விடுதலை செய்யவே வைகையின் சீற்றம் சற்றுத் தணிந்ததாம். வைகையின் கரையை அடைத்து வெள்ளத்தை தடுக்கும் முயற்சியில் மதுரை மாந்தர் அனைவரும் ஈடுபட வேண்டுமென அரசன் கட்டளையிட்டானாம். அரசனின் கட்டளையைநிறைவேற்ற முடியாமல் திகைத்து நின்ற பிட்டு வாணிபஞ் செய்யும் செம்மனச் செல்வி எனும் மூதாட்டிக்கு இரங்கி மதுரையின் மருமகனாகிய இறைவன் சொக்கநாதனே கூலியாளாக வடிவம் தாங்கி, அந்த ஏழைத்தாயின் பிட்டையே கூலியாக—உணவாக ஏற்று, கூடையும் மண் வெட்டியும் தோளில் சுமந்து கரையை அடைத்தானாம். அப்போது ‘ஒழுங்காக, அவன் வேலை செய்யவில்லையென்று கூறி பாண்டியனின் சேவகன் ஒருவன் பிரம்பால் கூலியாளாக நின்ற இறைவனுக்கு அடித்தானாம். இறைவன்மீது விழுந்த அந்த அடி, அடித்தவன் உட்பட உலகிலுள்ள அத்தனை ஜீவராசிகளிலும் பட்டதாம். இறைவனே பெண்மைக்கு மதிப்பும் பாதுகாப்பும் கொடுக்குமுகமாக பாண்டியனின் சேவகன் கொடுத்த அடியை, உமையவள் பக்கம்—அதாவதுஇடது பக்கம் வாங்காமல்— வலதுபக்கம் வாங்கிக் கொண்டு மறைந்தானாம்!

மதுரையில் இறைவன் நடத்தியதாகச் சொல்லப்படும் 64 திருவிளையாடல்களில் இதுவும் ஒன்றாகும். இவ்வாறு அன்று பொங்கியெழுந்து ஊரையே அழிக்க வந்ததாகச் சொல்லப்பட்ட வைகை நதிப் படுக்கை நாம் அங்கு சென்றபோது வெறும் கட்டாந்தரையாகக் காட்சியளித்தது. அதில் ஏழைகள் பலர் குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கவும் காணப்பட்டனர். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஒருபடத்தில் குறிப்பிட்டதுபோல— ‘கைவை’த்து நீர் எடுக்கவும் ‘வைகை’யில் நீர் இல்லை! ஒரே வரட்சிக் கோலம்!

மதுரை மாநகருக்கே பெருமை தந்து கொண்டிருக்கும் அன்னை மீனாட்சியம்மனின் ஆலயத்தின் வான்முட்டும் நான்மாடக் கோபுரங்களின் கலையழகை ரசித்தபடி மதுரை நகருக்குள் நுழைகிறோம். நான்கு புறமும் கோபுரம் அமைந்ததால் மதுரை நகருக்கு ‘நான்மாடக் கூடல்’ எனும் பெயரும் ஒன்றுண்டு!

மதுரைக்கு ‘கூடல்’ என்ற பெயர் எப்படி வந்தது என்பதைப்பற்றிக் கவிஞர் கண்ணதாசன் மதுரையில் நடைபெற்ற கவியரங்கொன்றில் சில ஆண்டுகளுக்கு முன் பாடியிருந்த ஒரு கவிதை என் நெஞ்சில் நிறைந்திருந்தது. அப்போது அது நினைவுக்கும் வந்தது.

“கூடல் என முன்னோர்
குறிப்பிட்ட நன் நகரில்
கூடியுள்ளோம் இன்று நாம்
கூடலுக்கும் பொருள் தந்தோம்
வாடும் புலவோர்கள்
மன்னர் மணி மண்டபத்தே
கூடலால் இந்நகரைக்
கூடல் எனச் சொன்னாரோ?
வாடல் துளியின்றி
மலர்க்காட்டில் காதல் செய்தே
ஊடல் புரிந்தே
உளம் மகிழ்ந்து நற்பொழுதில்
கூடும் குலமாதர்
குணமறிந்து வைத்தாரோ?
பாடும் தமிழைப்
பயில்கின்ற வைகை நதி
கூடிக் குளிக்கவரும்
கோதையர்கள் மேனியினைக்
கூடலால் சொன்னாரோ?
கொற்றவர்கள் வீதியிலே
சீனத்துப்பட்டும்
சிங்களத்துத் தேக்குகளும்
கானக் கருவிகளும்
கடல் வயிற்றுமாமணியும்

கோவை மகேசன்

# சன்மானம் பெறும் சிறுகதை!

புரட்டாதி இதழில் வெளிவந்திருந்த சிறுகதைகளில் கே. அருந்தவம் எழுதிய நினைவுகள் சாவதில்லையென்ற சிறுகதை சுடரின் சன்மானமாகிய ரூபா 25·00 பெறுகிறது. வளரும் இளம் எழுத்தாளர் அருந்தவத்துக்கு எமது பாராட்டுக்கள். மேற்படி கதையைப்பற்றி திருமலை— அமுதா எழுதியிருந்த சிறு குறிப் பொன்றை கீழே தருகிறோம். —ஆர்.

“நினைவுகள் சாவதில்லை சிறுகதையில் முன்னோடியான சிந்தனைகளை வளர்ப்பதுடன், பேசுவதுடன் நில்லாமல் செயலில் காட்டிய ராஜாவின் பாத்திரம் மனதில் பசுமையாக பதிந்துவிட்டது. இன்றைய இளம் சந்ததியினர் படிக்கவேண்டிய கதையென்று சொல்வதைவிட பெரியவர்கள் பெற்றோர்கள் தான் முக்கியமாக இக் கதையை படிக்க வேண்டுமென்று நான் கூறுவேன். காரணம், சில பெற்றோர்களிடத்தில் உதட்டளவில்தான் சாதி ஒழிப்பு பிரச்சாரம் இருக்கிறதே தவிர இதயத்தில் இல்லை.

அதே வேளையில், இக்கதையில் முன்னோடியான சிந்தனையில் சாதியை தீர்த்து கட்டிய ராஜா ஒரு கட்டத்தில் “உன்னை நம்பி என் உற்றார் உறவினர், தாய், தந்தை இவர்களையெல்லாம் விட்டு விட்டு வந்தேனே” என்று சுட்டிக்காட்டுவது கதையின் கருவான சாதி ஒழிப்புக்கு மெருகூட்டுவதாக தெரியவில்லை. மனதார சாதி ஒழிப்பை ஏற்றுக்கொள்பவன் ஒருக்காலும், எந்த நிலையிலும் சுட்டிக் காட்ட மாட்டான் என்பது என் அபிப்பிராயம், கதாசிரியர் அருந்தவத்தின் சிறப்பான இக்கதையில் இந்தத்தவறு எப்படி நேர்ந்தது என்று தெரியவில்லை?!

—‘அமுதா’ திருமலை.

---

தஞ்சைப் பயிர்வகையின்
தானியமும் ரோமர்களின்
குத்தீட்டிக் கத்திகளும்
கொல்லத்துச் சர்க்கரையும்
அரபுக் குதிரைகளும்
யானைகளும் விற்பனைக்குக்
கூடியதால் இந்நகரே
கூடல் என்றார்த்தாரோ?
இல்லை தமிழ்ப் பெரியீர்
இல்லை நாமெல்லோரும்
இன்று வந்து கூடுவோம்
என்பதனால் கூடலென்றார்!
சொற்கள் அனைத்தும்
பொருள் குறிக்கும் என முன்னோர்
சொன்னதுதான பொய்யோ
தூய தமிழ் மொழியில்
பூவைப்போல் பெண்ணென்றே
பூவை இவள் என்றுரைத்தார்
பாவை வளர்த்ததனால்
பாவை இவள் எனப்பகர்ந்தார்
மையலுக்கும் மானிடர்க்கும்
மை விழியாம் ஊசியினால்
தையல் போட்டாள் தம்மைத்
தையல் எனக் குறித்தார்!”

இவ்வாறு கவிச்சக்கரவர்த்தி கண்ணதாசன் என்றே பாடி என் நெஞ்சில் இடம் பெற்றிருந்த மேற்கண்ட கவிதை வரிகள், மதுரையை அடைந்தபோது என் நெஞ்சில் தாழமிட்டன,

மதுரை பேருந்து நிலையத்தில் இறங்கியது தான் தாமதம் — எங்கிருந்தோ வந்து மொய்த்துக்கொண்டுவிட்டார்கள் கூலி வேலை செய்யும் ‘பொடியன்கள்’. “சார், பெட்டியை இப்பிடிக் கொண்டாய்யா, நான் கொணுந்து தர்றேன்; வசதியான லாட்ஜ் பிடித்துத் தர்றேன்” என்று விடாப்பிடியாக நின்றார்கள்,

என் பெட்டியை நானே தூக்கும் வழக்கம் என்னிடமுண்டு என்பதை பாவம் அவர்கள் எப்படி அறிவார்கள்? அத்துடன் மதுரை எனக்கு புதிய ஊரும் அல்லவே; எனவே பெருமாள் கோவிலுக்கு அருகிலுள்ள லாட்ஜ் ஒன்றில் அறையெடுத்துக்கொண்டு குளித்துவிட்டு கொதிக்கிறவெய்யிலில் அவசரம் அவசரமாகப் புறப்பட்டோம், எங்கேயென்கிறீர்களா? மதுரைக்கு வந்ததும் முதல் வேலை “மதுராபுரியாளும் மகராசி”யை தரிசிப்பதுதானே!

பெண்மைக்கு — அன்னைக்கு — முதலிடம் தரும் திருக்கோவில்கள் இந்தியாவில் பல உண்டெனினும், அவற்றுள் மதுரை மீனாட்சி ஆலயமும் காஞ்சி காமாட்சி கோவிலும் காசி விசாலாட்சி ஆலயமும் சிறப்புடன் குறிப்பிடத்தக்கன.

எங்கெங்கு காணினும் சக்தியடா—தம்பி
ஏழு கடல் அவள் வண்ணமடா!—அந்தத்
தங்கத் தகட்டினில் கோடியண்டம்
அந்தத் தாயின் கைப்பந்தென ஆடுமடா!

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியது போன்று எங்கெங்கும் நிறைந்து நின்று உலகை இயக்கும் பேரருட் சக்தி — கருணையே வடிவான அங்கயற்கண்ணியாகக் காட்சிதரும் மதுரைக் கோவிலுக்குள் இப்போது நுழைவோம்! —வளரும்

# சாத்தான் வேதம் ஓதுகின்றது



குழந்தை இருளைக் கண்டு பயப்படுகின்றது. பெரியவர்கள் உண்மையைக் கண்டு பயப்படுகின்றனர். —பிளேட்டோ.

[4]

குழந்தைகள் மட்டுமன்றி, குழந்தை மனமுள்ள பெரியவர்கள் கூட இருளைக் கண்டு பயப்படத்தான் செய்கின்றனர். அந்த இருள் புற உலகை மூடியிருக்கும் இருளல்ல — மனித மனத்தின் அறிவு ஒளியை மூடியிருக்கும் அஞ்ஞான இருள். இந்த இருளைக் கண்டு அறிவிலிகள் அஞ்சுவதில்லை. அவர்கள் உண்மை என்ற மெய்ஞான இருளைக் கண்டுதான் அஞ்சுகின்றனர்.

மேசை மீதிருந்த கடிதத்தையும், அதன்மேல் உறையின் ஒரு மூலையில் ரப்பர் ஸ்டாம்பினால் குத்தப்பட்டிருந்த விலாசத்தையும் பார்த்தபோது முதலில் அதிர்ச்சியடைந்த மனோகர் என்ன செய்யப் போகின்றேன்...? என்ற நிலையில் துடித்துப்போனாயினும் அதற்கும் ஒருவழி...... இருக்கின்றது, அந்த வழியில் போனால் எதிர்காலம் என்ற ஓர் வெளியுலகில் உண்மையொளியில் தான் நிற்க வேண்டி வருமே என்று நினைத்தபோது அவன் பயந்து நடுங்கினான்.

முகம் எல்லாம் வியர்வை அரும்புகள். உள்ளத்தில் தீய உணர்ச்சிகள் உறைந்துவிட்ட நிலையில் அரும்பி நின்ற உண்மையுணர்வுகள் அவனைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன. அன்று அவன் வாழ்க்கையில், அவன் சென்ற திசையில், அவனுடைய அசமந்தப் போக்கில், முற்றிலும் மாறுதலான ஓர் நிலைக்குத் தூக்கி எறியப்பட்டான். அதேசமயம் மதுமலர் என்ன ஆனாள்...? என்ற கேள்வி எழுந்தபோது அவனைத் திகில் பற்றிக் கொண்டது. தவிர்க்கமுடியாத ஓர் நிலையில் தன்னைத் தவிக்க விட்டு அவள் தன்னையே...... 'இல்லை இல்லை' என்று கட்டியம் கூறுவதுபோல எதிரே கட்டிலில் மஞ்சுளா படுத்துக் கிடந்தாள். அவனுடைய பிணைப்பை விட்டுச் செல்லும் உறுதியான நெஞ்சு அவளுக்கு இருக்கமுடியாது என்பது மனோகருக்கு நன்கு தெரியும். ஆனாலும் அவனுடைய மன நிலையில் "கடவுளே" என்று தன்னையறியாமல் கடவுளைத் துணைக்கழைத்தான்.

அதுவரை நாள் அந்த நினைவே அவன் மனதில் தோன்றியதில்லை. கடவுள் சிந்தனையே அறியாத அவனுடைய மனம், அஞ்ஞான இருளில் மூழ்கிக் கிடந்தபோது அலறாத மனம், பிறரைத் துன்பப் படுகுழியில் தூக்கி வீசியபோது துயரப்படாத மனம், மாயப் பிரபஞ்சமென்னும் சூனிய இருளில் நின்று உண்மையின் ஓர் ஒளிப் பொட்டைக் கண்டபோது அஞ்சி நடுங்கி மனிதர்களையே மறந்த நிலையில் கடவுளைத் துணைக்கு அழைக்கின்றான்.

"என்ன மனோ?" என்ற மதுமலரின் குரல் கேட்டபோது தான் அவனுக்கு இவ்வுலக நினைப்பே ஏற்பட்டது.

"மது — மது நீ எங்கே போயிருந்தாய்... நான் ...... நான்" அவனால் பேசமுடியவில்லை. அவளை அப்படியே கட்டிப் பிடித்து நெஞ்சோடு நெஞ்சாய் இறுக்கிக் கொண்டான்.

"என்ன நடந்தது மனோ... மனோ"

" நீ எங்கே போனாய்?"

"நான் பாத்றூமிற்கு போயிருந்தேன்."

"துன்பம் வரும் போதும் ஒருமித்து நம்மிடையே சேர்ந்துதான் வரும் போலும். எனக்கு நேற்று நோட்டீஸ் வந்திருந்தது. இன்று உன்பெயரிலும் வந்திருக்கு. இரண்டுக்கும் சேர்த்து மொத்தம் பத்

கே.எஸ். ஆனந்தன்

## ஒரு நீதிமன்றப் பகிடி!

வழக்காளி தரப்புச் சட்டத்தரணி எதிரி தரப்பு சட்டத்தரணியைப் பார்த்து "நீர் ஒரு நம்பிக்கைத் துரோகி" என்று சீறினார். எதிரி தரப்பு சட்டத்தரணியும் விடவில்லை. அவர் வழக்காளி தரப்பு சட்டத்தரணியைப் பார்த்து, "நீர் ஒரு பொய்யன்" என்று திருப்பிக் கத்தினார். இரண்டுபேரது கூச்சலையும் கேட்டுக் கொண்டிருந்த நீதவான் அமைதியாக இவ்வாறு கூறினார்:-

"இரண்டு பக்கத்து சட்டத்தரணிகளும் ஒருவரையொருவர் சரியாக இனம் காட்டிவிட்டீர்கள், இனி வழக்கை தொடரலாம்!"

---

தாயிரம் வேண்டும். வட்டி வேறு இருக்கே. நான் என்ன செய்வேன். தடுமாறினான் மனோகர்.

"மனோ இதற்காகவா இப்படிப் பயந்தீர்கள். கேவலம் பணத்துக்காகவா பயந்தீர்கள்? அதுவும் பத்தாயிரம்."

"மது நீ... நீ... என்ன உளறுகின்றாய்?"

"மனோ கஷ்டம் வரும்போதுதான் அதைத் தாங்கிக் கொள்கிற உறுதியான உள்ளம் நமக்கு வேண்டும். நான் துன்பத்தின் அடிச்சுவட்டிலேயே தொடர்ந்து நடந்து பழக்கப்பட்டு விட்டவள். இந்த அற்ப விடயத்துக்கு கலங்குவேனா? மனோ, நாற்பதினாயிரம் ரூபா பெறுமதியான இந்த வீடு வளவு இருக்கே. இதை விற்போம். இல்லையெனில் 'கொண்டிஷன்' அறுதிக்கு வைத்துவிட்டுக் கடனை அடைப்போம். பின்பு பார்க்கலாம் தானே? அதற்காக ஏன் வீணாய் நீங்கள்......" என்று அவனுடைய தலையைக் கோதி விட்டாள்.

மனோகரின் உள்ளம் ஆறுதலடைந்தது. அவளுடைய அரவணைப்பும், அமைதியான பேச்சும், எதையும் சமாளிக்கக் கூடிய ஆற்றல்வாய்ந்த தன்மையும் அதே நேரத்தில் அவள் தன்னைப்பற்றி நினைக்காமல், தன் பொருள் பண்டம் என்று நினைக்காமல், கஷ்டம் என்று கூறுமுன்னே உதவும் மனப்பான்மையையும் நினைத்து உருகினான் மனோகர், ஒரே வயிற்றில், ஒரே குருதியில் உருவாகி ஒரே தாயின் சுவாசத்தை சுவாசித்து, அவளுடைய ஜீவசத்தை உறிஞ்சி வளர்ந்து பிறந்துவிட்ட தன் சகோதரிகளையும் — மதுமலரையும் எடை போட்டான். மதுமலர் சாதாரண பெண்ணாக அவன் கண்களுக்குத் தோன்றவில்லை. கேவலம் வெறும் உடலிச்சைக்காக மட்டும் தன்னை அவள் விரும்பவில்லை என்ற ஓர் உண்மை அவன் உள்ளத்தில் மலர ஆரம்பித்தது.

"என்ன மனோ அப்படியே ஸ்தம்பித்துப் போனீர்கள்? ஏன் ஒன்றும் பேசமாட்டேன் என்கிறீர்கள்?"

"ம்... என்ன... ஓ..." தடுமாறிய அவன் "மது நான் சில நிமிடங்களில் தடுமாறி விட்டேன்." இந்த உலகத்தை விட்டே போனால் என்ன என்ற ஒரு நிலைக்குக்கூட வந்து விட்டேன்" என்றான்.

"கடவுளே! அப்படி ஏன் நினைத்தீர்கள். இந்த மது உங்களை என்றும் அந்த நிலைக்கு ஆளாக்கமாட்டாள்" என்று அவன் நெஞ்சில் முகம் புதைத்து விம்மினாள்.

துன்பத்தின் நடுவிலும் இன்பம் பிறக்குமென்று சிலர் கூறுவதுண்டு. அந்த நிலையிலும் அவர்கள் உள்ளங்களில் ஓர் ஆனந்த மயக்கம் தோன்றிவிட்டது போலும். அவளை இறுகத் தழுவியபடியே "மது உனக்காக இந்த உலகில் எதையும் நான் இழக்கத் தயாராயிருக்கிறேன். ஆனால் உன்னை இழக்க நான் தயாரில்லை. நீ என்னை வெறுத்தாலும் நான் உன்னை வெறுக்கமாட்டேன்." என்று ஆவேசம் வந்தவனாய் அவளை மேலும் இறுக்கி அணைத்துக் கொண்டே முத்தமழை பொழிந்தான்.

ஆதிகால மனிதனிடம் விலங்குணர்ச்சியே மேம்பட்டுக் காணப்பட்டதாகவும், காலப் பரிமாண வளர்ச்சியில் மனிதனுடைய பண்பாட்டுணர்வும் வளர்ச்சியுற்று அவன் நாகரீகமடைந்து பரிபக்குவமுடையவனாகக் காணப்பட்டாலும் சில சமயங்கள் அந்த விலங்குணர்ச்சி தலை தூக்கிவிடுகின்றது என்று தத்துவ ஞானிகள், அறிவியலாளர்கள் கூறுகின்றனர். இது எவ்வளவுதூரம் உண்மை என்பதை ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே கூறிக் கொண்டு ஒப்புக் கொள்ள வேண்டியவையேயன்றி பிறர் கூறி ஒப்புக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்பது அப்போது மனோகருக்கும் — மது மலருக்குமிடையே நடந்த அந்த உணர்வுப் போராட்டமே சான்று பகரும்.

துன்பத்தையோ துயரத்தையோ தேடி அலைபவர்கள் உலகில் யாரும் இல்லை. பெரும்பாலானவர்கள் இன்பத்தைத் தேடி அலைபவர்களே. இந்த இன்பம் எப்படியாவது கிடைத்தால் போதும் என்று நினைப்பவர்களே பெரும்பாலானவர்கள். இவர்கள் தங்கள் வாழ்க்கையில் கிடைக்கவேண்டிய சாதாரண மகிழ்ச்சியே கிடைக்காமல் அலைந்து பின்பு சிற்றின்பத்திலோ, குடியிலோ மூழ்கி அதுதான் இவ்வுலகில்

* * * * * * * * * *

## ஓர் அனுபவ மொழி!

உனது எதிரிகளையும் நீயே உருவாக்கிக் கொள்ளுகிறாய்; உனது நண்பர்களையும் நீயே உருவாக்கிக் கொள்ளுகிறாய்; ஆனால் உனது அடுத்த வீட்டுக்காரனையோ இறைவன் அனுப்பி வைக்கிறான்!

— யாரோ

* * * * * * * * * *

தலையாய இன்பம் — துய ரத்தை மறக்க இது தவிர வேறு வழியில்லை என்று பெருமைப்பட்டுக் கொள்வார்கள். அவர்கள் வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படுவது கிடையாது. அந்த மாதிரி ஒருவனே மனோகர். உலகில் மதுமலர் தான் அவனுடைய நுகர்ச்சியின் ஏகாதிபத்தியம்.

அவர்களது உணர்ச்சிப் போராட்டம் முடிந்தபோது, உணர்வுகள் ஒடுங்கிய நிலையில் வேறுபல நினைவுகள் மனதில் பதிய ஆரம்பித்தன.

"மது........."

"ம்"

"ஒரு மதுவின் மயக்கத்தில் மற்ற மதுவை மறந்துவிட்டேன். இப்ப அது எனக்கு வேண்டும்."

அடுத்த நிமிடமே சாராயப் போத்தலும், கிளாசும் அவன் முன் வைக்கப்பட்டது.

"மது என் மனம்போல நடக்க என்னைப் பெற்றவளாலே கூட முடியவில்லை. இருந்தாற்போல நாளைக்குச் செத்துவிட்டால் இந்த ஆசைகளுடனேயா நான் சாக வேண்டும்:"

"மனோ அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள் வாழ வேண்டியவர். இப்படிக் கூறலாமா?"



"வேதாந்தம் பேசலாம் மது. காலன் வரும் காலம் யாருக்குமே தெரியாது. உனக்குத் தெரியுமா......?"

"அவனுக்குப் போதை ஏறிக் கொண்டு வந்தது.

"நாம் பிறக்குமுன்பே எப்போது பிறப்போம் என்று சொல்லிவிடுகின்றார்கள். ஆனால் இறப்பு... அது அவன் ஒருவனால் சொல்லாமல் செய்யப்படும் செயல் அது......"

இனி அவன்தான் பேசுவான். அவன் பேசிக் கொண்டேயிருப்பான். மற்றவர்கள் கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும்.

மது அருந்துவது கெட்ட பழக்கம். அது ஒருவனைக் கெட்டவனாக்குகின்றது. மனதில் தீய சிந்தனையை தோற்றுவித்து, தீயதையே செய்யவும் வைக்கின்றது, என்பது பெரும்பாலான அபிப்பிராயம். ஆனால் சிலருக்கு மது அருந்திய பின்புதான் மனதில் நல்ல சிந்தனையும், நற்செயல்களும் உதயமாகின்றன. விலங்குணர்ச்சியும் பண்பாட்டுணர்ச்சியும் எப்படி மனித மனத்தில் ஒரே ஊற்றுக் கண்ணில் உதயமாகின்றதோ அதே மன ஊற்றுக் கண்ணில் இப்படி மாறுபட்ட நிலைகள் உருவாகின்ற விந்தையைப் பற்றி வைத்திய நிபுணர்களும், மனோதத்துவ ஆராய்ச்சியாளர்களும் என்னென்னவோ கூறுகின்றார்கள். ஆனாலும் இது கருவிகளுக்கு அகப்படாத ஒரு சக்தி — ஒரு பிரச்சினை — ஒரு விந்தை என்றுதான் சொல்ல வேண்டும்.

இப்படிபட்ட ஒரு நிலை இருந்தாற்போல மனோகருக்கும் ஏற்படுவதுண்டு. அந்த வேளையில் அவனுடைய பேச்சையோ, செயலையோ யாரும் நம்புவதில்லை. காரணம் அவனை ஆட்டுவிப்பது போதை என்பதால் அதற்கு மனித சக்தி மதிப்பளிப்பதில்லை.

"ஏன் உன் வீட்டை விற்று கடனையடைத்தால் எங்கே..."

'வாடகைக்கு எங்காவது டம் பார்ப்போம். மிகுதிப் ணத்துக்கு எங்காவது......''

''வேண்டாம் மது உன் வீடு வாசலை விற்றேன் என்ற கெட்ட பெயர் எனக்கு ஏற் பட்டாலும் நாளைக்கு என்னுல் நீ அவதிப்படக் கூடாது. உனக் கும் ஒரு பிள்ளையிருக்கு."

''நீங்கள் ஏன் இப்படிப் பிரித்துப் பேசுகின்றீர்கள் நான் வேறு... நீங்கள் வேரு?''

''மது! என்ன இருந்தாலும் அவள் உன் மகள். என் மக ளல்ல. உன் சொத்தில் முழு உரிமையும் அவளுக்குத்தான். அதை நான் கெடுக்கமாட் டன். வேண்டுமானுல் நீ சொன்னதுபோல 'கொண்டி ஷன்' அறுதியாய்......''

''மனே! அதுவும் கஷ்டம் தானே. பின்பு வட்டி முத லாய் பெருந்தொகையாகி விடும். எப்படி......?''

''அதுவும் சரிதான். அப்படி யானுல் அதுக்கு ஒரேவழி என் மாமன் சொன்னதுதான்." என்று கூறிவிட்டுப் பேய்ச் சிரிப்புச் சிரித்தான்.

அவன் சிரிக்கச் சிரிக்க அவ ளுக்குப் பயம் வந்தது. அவன் அப்படிச் சிரித்து ஒரு நாளும் அவள் பார்த்ததில்லை. அவன் சிரித்த சிரிப்பில் படுத்துத் தூங்கிய அவளுடைய மகள் மஞ்சுகூட எழுந்துவிட்டாள். அந்தச் சிரிப்பின் முடிவில் அவன் விழிகளில் நீர் அருவி யெனச் சொரிந்தது. உண்மை யிலேயே அவன் குமுறிக் குமுறி அழுதான்.

அவனுடைய மாறுபாடான மன உணர்வுகளும், செய்கைக ளும் அவளுக்குப் புதியனவல்ல வாயினும் அப்படி அவனு டைய நிலை மாறும் செயலால் அவள் செய்வதறியாது திகைத்து நின்றுவிடுகின்ருள்.

''மனே என்ன இது. ஒருக் கால் சிரிக்கின்றீர்கள். சிரிப்பு மறையுமுன்னே குலுங்கிக் குலுங்கி அழுகின்றீர்கள். இப்ப என்ன நடந்தது? இப் படி நீங்கள் நடந்து கொள்வ தால் நான் என்ன பாடு படு கின்றேன் என்று தெரியுமா உங்களுக்கு?''

''பைத்தியக்காரி. நீ ஆயிரம் சமாதானங்கள் கூறலாம். ஆயிரம் வழிவகைகளைக் காட்டி ஆறுதலளிக்கலாம். ஆனுல் நடைமுறையில்...... அதை நினைத்தேன், சிரிப்பு வந்தது. அப்படி நான் நடந்து விட்டால் உன் நிலைமை...... அதை நினைத்தேன் அழுகை வந்துவிட்டது. அவ்வளவு தான்.'' என்று கூறிவிட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

''மனே, முன்னுக்குப் பின் முரணுக நீங்கள் பேசுவதும், சிலசமயம் அப்படியே முன் னுக்குப் பின் முரணுக நடந்து கொள்வதும் எனக்கு ஒன்று மாய்ப் புரியவில்லை. அதனுற் தான் கலங்குகிறேன்.''

''நீ கலங்கக்கூடாது என்ப தற்காகத்தான் நான் என்னைத் தேடிவரும் சொத்துச் சுகங் களையெல்லாம் கூட விரட்டி விட நினைக்கிறேன்.''

''அது என்ன மனே?''

'என் மாமன் பொன்னை யாவை உனக்குத் தெரியும் தானே?''

''ஆமாம்''

''அவருடைய இளைய மகள் சாவித்திரியை உனக்குத் தெரி யுமா?''

''ஆமாம். நல்ல குணமான பிள்ளை. அழகானவளும்.''

''அவளை எனக்குக் கட்டி வைக்க முனைகின்ருர் என்ரை அம்மான்''

''என்ன?''

''ஏன் அந்தரப் படுகின்ருய்? அவளைத் தனிய அனுப்பவில்லை. நகைநட்டோடு இருபதினுயி ரம் ரூபாய் காசும் தாருராம்.''

''மனே நீங்கள் கூறுவது...''

''பொய்யில்லை. நூற்றுக்கு நூறு உண்மை. அம்மாவோடு கதைத்ததை நான்'கேட்டேன். என்னிடம் கேட்கப் பயப் பட்டு எவருமே கதைக்க வில்லை. அதைத்தான் நினைத் துச் சிரித்தேன் — அழுதேன். மது நீ இருக்கும் வரை நான்... அதற்காக நீ என்னை விட்டு விட்டுப் போய்விடாதே. மது, லட்சமாகக் கொட்டித் தந்தா லும் உனக்கு அவை நிகராக மாட்டா. நான் போதையில் உளறுவதாக நினைக்காதே மது. இதுதான் உண்மையும். ஆபத்திலே உதவாதவங்கள் சாதாரணமாக என் கஷ்டத் தில் உதவாதவங்கள் ஆதாயம் கருதும் நோக்கில் வந்து தரு வதை ஏற்கவேணுமா? ம்...... என்ன''

''உங்கள் விருப்பப்படி செய் யுங்கள் மனே.'' என்று கூறி விட்டு அடுக்களைக்குச் சென் ருள் மது.

எப்பொழுதும் போல காலை விடிந்தது. அன்று வெள்ளிக் கிழமை. அதிகாலையிலேயே எழுந்துவிட்ட பார்வதி அம் மாள் கூட்டித் தெளித்து விட்டு, மகனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்துமுடித்து அவனைக் கடைக்கு அனுப்பிவிட்டு கோயிலுக்குச் செல்வதற்காக ஒரு சேலையை எடுத்து நீரில் தோய்த்துவிட்டு முற்றத்தில் உலர்வதற்காகக் கட்டிக் கொண்டு நின்ருள். வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு திரும்பி வாசலைப் பார்த்தாள்.

வெளி வாசலுக்குப் போடப் பட்டிருந்த 'தகரக் கேற்' றைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தவளைப் பார்த்ததும் பார்வதியம்மா ளுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. வெள்ளிக் கிழமையும் அதுவுமாய் இவள் ஏன் இங்குவந்தாள் என்று நினைத்தவளாய் அவளையே உற்றுப் பார்த்தபடி நின்றிருந் தாள்.

(வளரும்)

# பாரதியும் அகவலும்

பிரான்

'கலியை அழித்துக் கேடில் கிருத யுகத்தை நிறுத்துவேன்' என்று சங்க நாதம் செய்தான் பாரதி. 'நமக்குத் தொழில் கவிதை நாட்டுக் குழைத்தல்' என்பது பாரதியின் கோட்பாடு. சங்க காலத்து நூல்களிற் பெரு வழக்காக உள்ள அகவல் முதல் 'ஆனு'வுக்கு அடுத்த எழுத்தை அறியாத கிராமியக் கவிக் குயிலின் வாய்மொழிப் பாடல்வரை பல்வேறு யாப்பு எல்லைகட்குட்பட்ட கவிதைகளைப் பாரதி கையாண்டு வெற்றி கண்டான். குறிப்பிட்ட நோக்கங்களுக்கு குறிப்பிட்டவகைக் கவிதை தான் ஏற்றது என்ற இடைக்காலக் கோட்பாட்டைத் தகர்த்தெறிந்து கவிதைக்குப் புதிய பரிமாணம் ஏற்படுத்தியவன் பாரதி. யாரோ ஒருவர் குறிப்பிட்டது போல யாப்பு வடிவங்கள் அனைத்தும் பாரதிக்குக் கைகட்டிச் சேவகம் புரிந்தன.

எனினும் பாரதி இலக்கணத்தில் தவறி விட்டார் என்று தில்லிப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்டார். அக்கருத்து தவறென ஈழத்துக் கல்வியாளர் ஒருவர் 'தாமரை' இதழில் எடுத்துக்காட்டினார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் ஒருவரும் பாரதி பற்றிய தவறான கருத்தொன்றைச் சில காலத்துக்கு முன் வெளியிட்டார். தமிழை ஒரு பாடமாகப் பயிலும் யாழ். வளாக மாணவர்க்குச் சிறப்பாகவும் தமிழறிந்தோர் அனைவருக்கும் பொதுவாகவும் பயன்படும் என்பதால் அப்பேராசிரியரின் கருத்தை ஆராய முயல்கிறேன்.

"தமிழிலே அகவற்பா உள்ளத்து நெகிழ்ச்சியையும் உணர்ச்சிப் பெருக்கையும் வெளிப்படுத்துவதற்கு உகந்த யாப்பு அன்று. அதனாலேயே பிற்காலத்தில் பாவினங்கள் தோன்றின. சொனெற்றுப் பாவகையைப் பின்பற்றியெழுதினல் அது தவிர்க்க இயலாதவாறு உயிர்த் துடிப்பற்ற அகவற் பாவைப் பயன்படுத்த வைக்கும் என்றுணர்ந்த பாரதியார் வெகு விரைவிலேயே அதனைக் கைவிட்டு எளிமையும் இனிமையும் இசைப் பாங்கும் கொண்ட பிற்கால இசைத் தமிழ் வடிவங்களுக்கு ஏற்ற யாப்பாகக் கொண்டார்." இதுதான் பேர் ஆசிரியரின் கூற்று.

(1) அகவல் உள்ள நெகிழ்ச்சியை வெளிப்படுத்தாது.

(2) அது உணர்ச்சிப் பெருக்கை வெளிப்படுத்தாது.

(3) பிற்காலத்தார் அதனை விலக்கினர்.

(4) அதற்குப் பதிலாகப் பாவைகளை உருவாக்கினர்.

(5) அகவல் உயிர்த்துடிப் பற்றது.

(6) பாரதி அகவல் மீது கொண்ட வெறுப்பால் 'சொனெற்'றை விட்டார்.

(7) பாரதி அகவலைக் கைவிட்டார்.

(8) இசைத் தமிழ் வடிவங்களைக் கையாண்டார்.

என்று தமது நவயுகக் கோட்பாடுகளைப் பாரதிமீது ஏற்றிக் கூறி நிலைநாட்ட பேராசிரியர் முயல்வதை மேற்போந்த கூற்றிலே காண்கிறோம்.

பாரத காலத்தவராகக் கருதப்படும் முரிஞ்சியூர் முடி நாகனுர் முதல் இளைய பாரதத்தின் புதுக்கவிஞன் வரை, மதுரை ஈழத்துப் பூதன் தேவனுர் முதல் தமிழீழ விடுதலைக் கவிஞன் வரை தொடர்ச்சியாக வரும் பரம்பரையினைச் சார்ந்த அனைவருமே இன்றுவரை 'ஆசிரியம்' எனப்படும் அகவலைப் பயன்படுத்தி வருவது வெளிப்படை உள்ளத்து நெகிழ்ச்சியையும் உணர்ச்சிப் பெருக்கையும் பெரும் பான்மையும் அகவற் பாக்களான சிலப்பதிகார காவியத்திற் படைத்தளித்து வான்புகழ் கொண்டவர் இளங்கோவடிகள். இதனை உணர்ந்து படித்து அநுபவித்து 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்று சான்றிதழ் வழங்கியவர் பாரதியார். ஆகவே அகவலைப் பாரதி போற்றவில்லை என்பது பொய்யுரை.

பாரதி தமிழாய்ந்த தமிழர்; இளமையிலேயே பண்டிதர்களையும் புறங்காணச் செய்தவர். அவர் அகவல், வெண்பா முதலியவற்றையும், நால்வகைப் பாவினங்களையும், இசைப் பாவடிவங்களையும் பயன்படுத்தினுர். பாரதி பாடலை மேலோட்டமாகப் பார்ப்பவர்க்கே இவ்வுண்மை புலனுகும். இதற்குப் பட்டப் பிற் படிப்பு ஆராய்ச்சியோ பல்கலைக் கழகப் பேராசிரியர் பட்டமோ வேண்டியதில்லை.

'பாரதி வெகு விரைவிலே அகவலைக் கைவிட்டா'ரெனில் அவரது பாடற்றொகுப்பில் அகவல் அருகியே காணப்பட வேண்டும். இதனை உறுதி செய்யும் நோக்குடன் பாரதி

பாடல் (மகாகவி பாரதியார் கவிதைகள். அருணு பதிப்பகம் - மதுரை - நவம்பர் 1962) முழுவதையும் முதலிலிருந்து கடைசிவரை பார்க்கிறேன். இப் பதிப்பில் உள்ளபடி பாரதியார் 1444 அடிகளைக் கொண்ட 23 அகவற் பாடல்களைப் பாடியுள்ளார் என்பதைக் காண்கிரும். அவைபற்றிய விபரங்களைக் கீழே காண்க.

| | |
|---|---|
| 1 தனிமையிரக்கம் — | 14 அடிகள். |
| 2 யான் — | 14 " |
| 3 சந்திரிகை — | 14 " |
| 4 இந்தியாவின் அழைப்பு — 63 | " |
| 5 பாரதமாதா நவரத்தின மாலே 28 | " |
| 6 ஜாதிய கீதம் I — 27 | " |
| 7 ஜாதிய கீதம் II — 29 | " |
| 8 தமிழ்ச்சாதி — 123 | " |
| 9 வாழிய செந்தமிழ் — 9 | " |
| 10 சத்திரபதி சிவாஜி — 187 | " |
| 11 குருகோவிந்தர் — 205 | " |
| 12 விநாயகர் நான்மணிமாலே—198 (10 அகவற்பாக்கள்) | " |
| 13 போற்றி அகவல் — 23 | " |
| 14 கவிதைத் தலைவி — 23 | " |
| 15 கவிதைக் காதலி — 83 | " |
| 16 ஸ்ரீ சுப்பராம திட்சிதர் — 29 | " |
| 17 வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு — 46 | " |
| 18 விடுதலே (நாடகம்) — 84 | " |
| 19 கண்ணன் என் சீடன் — 150 | " |
| 20 பாஞ்சாலி சபதம் — 17 | " |
| 21 மணப் பெண் — 38 | " |
| 22 புதிய ஆத்திசூடி 10 | " |
| 23 சாதாரண வருஷத்துத் தூமகேது — 30 | " |

பாரதியார் பாடிய முதற் கவிதை தனிமை இரக்கம் என்ற தலைப்போடு 1904இல் அவரது 22ஆம் வயதில் மதுரை விவேக பாநு இதழில் வெளிவந்தது. இப்பாடல் 14 அடிகளானது; நேரிசை ஆசிரியப் பாவால் அமைந்தது. இது ஆங்கிலத்திலுள்ள, 'சொனெற்று'ப் பாவகையை அடியொற்றி எழுந்ததாகக் கருதப்படுவது. இதனைவிட யான் (1906 செப்டெம்பர்), சந்திரிகை (1906 செப்டெம்பர்) ஆகிய பாடல்கள் அகவல் யாப்பில் 14 அடிகளைக் கொண்டவையாக உள்ளன.

"பரிதிமாற் கலைஞரும் பாரதியும் சொனெற்றுப் பாவகையைக் கையாள்வதில் வெற்றி கண்டனர் என்பதற்கில்லை...... உயிர்த்துடிப்பற்ற அகவற்பாவைப் பயன்படுத்தவைக்கும் என்றுணர்ந்த பாரதியார் வெகுவிரைவிலேயே அதனைக் கைவிட்டு...... இசைத்தமிழ் வடிவங்களைத் தனது கவிதைகளுக்கேற்ற யாப்பாகக் கொண்டார்" என்று பேராசிரியர் கட்டுரைப்பது மெய்யாளுல் பாரதியார் 1906க்குப் பின் அகவலை விட்டொழித்திருக்க வேண்டும். ஆனுல் உண்மை வேறுவிதமானது. 1906க்குப் பின் பாரதியார் 'சொனெற்றை' விட்டொழித்தார்; அகவலை விடாது பயன்படுத்தினர். 1910ஆம் ஆண்டிற்குரிய சாதாரண வருஷத்துத் தூமகேதுவும் 1912 ஆம் ஆண்டுக்குரிய பாஞ்சாலி சபதம் பாடற்பகுதியும் அகவலால் அமைந்துள்ளன. இவை 1906ஆம் ஆண்டுக்குப் பிந்திய ஆண்டுப் பகுதிக்கு உரியனவாக இருப்பதால் பாரதியார் அகவலை என்றும் விலக்கவில்லை எனலாம்.

பாரதியார் தமது 39ஆம் வயதில் 1921 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் நாள் மறைந்தார். இதே ஆண்டு யூலை 19ஆம் நாள் சுதேசமித்திரன் இதழில் இந்தியாவி்ன் அழைப்பு என்ற பாடல் பாரதியாரால் வெளியிடப்பட்டது. யூலைமாத இறுதியில் பாரதியார் யானையால் தாக்கப்பட்டு நோயுற்றிருந்தமையால் இதனை அவரது இறுதிப் பாடலாகக் கொள்ளலாம். ஆகவே, அகவலில் முதற் கவிதையை எழுத ஆரம்பித்த பாரதியாரின் இறுதிக் கவிதையும் அகவலாகவே முடிந்தது. எனவே, அவர் அகவலை விரைவில் கைவிட்டார் என்பது பொருந்தாக் கூற்ருகும்.

"சங்க யாப்பான அகவற்பாவில் இவற்றை (சொனெற்று) இயற்றினமையாலும்... கடின நடையில் அவற்றை எழுத நேரிட்டது என்பது "பேராசிரியம்"

'யாணர்க் குறையுளா மிந்துநா டதனிற்
காணற் கினிய காட்சிகள் பலவினு
மாணப் பெரிய வனப்பமைந் தின்கவி
வாணர்க் கமுதா வயங்கிடும் பொருளிதென்
றூணப் புலவோ னுரைத்துளன் முன்னுள்

என்ற அகவலாலியன்ற (சந்திரிகை) பாடல் அரும்பதங்கள் விரவிய கடின நடைப் பாடலாக உள்ளது.

இதற்கு முரணுக வாழிய செந்தமிழ் என்ற, அகவலால் அமைந்த பாடல் பாமரர்க்கும் விளங்கும் எளிமைமிக்கதாக உள்ளது.

'வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க
நன்மைவந் தெய்துக மறம்மடி வுறுக'

என்ற இப்பாடல் கடின நடைப் பாடலா?

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம்... இவற்றினையுடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புத்துயிர் தருவோனுகிருன்." என்ற குறிக்கோளோடு பாரதியார் படைத்த காவியம் பாஞ்சாலி சபதம். இந்த நூலிலே அகவல் யாப்பையும் கையாண்டிருப்பதால் அகவல் எளிமைக்குத் தடையல்ல; கடினத் தன்மைக்குக் காரணமுமில்லை என்பதைப் பாரதியார் உறுதி செய்கிருர்.

# திருமலை யாத்திரை

(உரிமைப் போராட்டத்தின் உச்சக் கட்டம்! 1956ம் ஆண்டு ஆவணித் திங்கள் 19ம் நாள்! அணி தேர் புரவி ஆட் பெரும் படையோடு அன்றையத் தமிழ் வேந்தர் படை நடத்தியதாய்ப் பறை சாற்றுமே பழந்தமிழ் இலக்கியங்கள்...... அப்படி...... திருமலை நோக்கித் திரண்டது திண்தோள் மறவர் வெள்ளம்! பார் சிறுத்ததோ? படை பெருத்ததோ? எனப் பார்த்தவர்கள் பகர்ந்தனர் — பார்வையால் அளந்தனர்)

பெருமலை நகர்ந்தாற் போல
பிடிகரி நடந்தாற் போல
கருங்கடல் எழுந்தாற் போல
ககனமே விரிந்தாற் போல
திருமலை நோக்கி எங்கள்
திண்தோள் மறவர் கூட்டம்
தருமப்போர் தொடுக்கச் சென்றார்
தரணியும் அதிரத் தானே!

தேர்ப்படை அசைந்தாற் போல
தேசங்கள் பெருத்தாற் போல
கார்ப்படை அடைத்தாற் போல
காடுகள் நடந்தாற் போல
ஊர்ப்படை ஊர்ந்தாற் போல
ஓர் படை செல்லக் கண்டார்
போர்ப்படை என்றார்! மற்றோர்
புற நானூற்றுப் படையே என்றார்!

காந்திய வழியிற் செல்வோன்
காட்சிக்கு எளியனவான்
சாந்தமே வடிவமானோன்
சத்தியம் தவறா நெஞ்சன்
ஏந்த லெம் செல்வ நாயகம்
ஈழத்துத் தமிழர் தந்தை
வேந்தனைப் போலச் சென்றான்
வீரர்கள் படைகள் சூழ!

நரம்பினில் முறுக்கு ஏற
நாடியும் புடைக்கச் சென்றார்
வரம்பிலா மகிழ்ச்சியாலே
வானதிர் கொள்ளும் வண்ணம்
பெரு மொலி முழக்கம் செய்வார்
பீமனும் தோற்றுப் போவான்
திரும்பிய பக்க மெல்லாம்
தீந் தமிழ் முழக்க மங்கே!

கிராமங்கள் தோறும் முன்பு
கேட்டிரா ஆரவாரம்
திராவிடச் சேனை செல்லும்
தெருவெல்லாம் அலங்காரம்
இராப்பகல் என்று கூட
எண்ணமே யின்றி மக்கள்
வருவிருந் தாளி கட்கு
வரவேற்புப் பந்த லிட்டார்!

குளிர் பானக் குட்வரிசை
குலை வாழைப் பழக் குவியல்
இளநீர்க் குலை வகைகள்
எலுமிச்சம் பழச் சாறு
வெளி நாட்டுக் கனி வர்க்கம்
வெண் தயிர்க் கரையல், மோர்
வழி யெல்லாம் வைத்து மக்கள்
வழங்கினர் உணர்ச்சி யோடே!

இடை இடை ஊர்கள் தோறும்
இரவினைக் கழித்துச் சென்றார்
நடையினிற் களைத்த தாலே
நண்பகல் சிறிது ஆறி
படைத்த வெண் சோறு உண்டு
பல் சுவைக் கறிக ளோடு
விடையினைப் பெற்று மக்கள்
விருந்தினைப் புகழ்ந்து சென்றார்!

— ஈழத்துக் கவிஞன்

---

'பார்சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன ஓகோ
என்னடீ இந்த வண்ணத் தியல்புகள்
எத்தனை வடிவம் எத்தனை கலவை
தீயின் குழம்புகள் செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள் வெண்மை தோன்றுமே
எரிந்திடும் தங்கத் தீவுகள் பாரடீ
நீலப் பொய்கைகள் அடடா நீல
வண்ண மொன்றில் எத்தனை வகையடீ'

என்ற இப்பாடலில் (பாஞ்சாலி சபதம்—152) உணர்ச்சிப் பெருக்கு இல்லையா? இது உயிர்த்துடிப்பற்றதா? உள்ளத்து நெகிழ்ச்சியைக் காட்டவில்லையா? இது கடின நடையானதா? இது போன்ற பல அகவற் பாடல்கள் பேராசிரியரின் கோட்பாட்டைச் சிதறடிக்கக் காணலாம்.

"புதிய சமுதாய உணர்வுகள் பிறந்ததும் தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டன." என்பது யாழ்-வளாகப் பேராசிரியர் கூற்று. இந்தியாவின் அழைப்பு, பாரதமாதா நவரத்தின மாலை, ஜாதிய கீதம்I, ஜாதிய கீதம்II, தமிழ்ச் சாதி, வாழிய செந்தமிழ் முதலிய தேசிய கீதங்கள் அகவல் யாப்பிற் பாடப்பட்டுள்ளன, எனவே சமுதாய உணர்வுகளைத் திறம்பட உணர்த்த அகவலும் ஏற்றதே என்பதைப் பாரதியார் தமது கவிதைகள் மூலம் நிலை நாட்டியிருப்பதைக் காண்கிறோம்.

# 147 மணித்தியாலங்கள் நடந்தவர்!

அண்மையில் கொழுப்பு என். சி. சி. மைதானத்தில் 147 மணித் தியாலங்கள் 20 மணித்துளிகள்—அதாவது ஆறு நாட்கள் தொடர்ச்சியாக நடந்து ஒரு புதிய சாதனையை நிலைநாட்டிய வீர இளைஞரான விவேகானந்தன் செல்வக் குமார் ஆனந்தன் வீரம்மணக்கும் மண்ணான வல்வெட்டித்துறையைப் பிறப் பிடமாககொண்டவர். பி. எஸ். சி. பட்டதாரியான இவர் 33 வயதுடைய ஓர் இளம் சட்டத்தரணியுமாவார். இரு பிள்ளைகளின் தந்தையான இவர் தீவிர தமிழுணர்ச்சி மிக்க குடும்பத்தில் பிறநதவர். தமிழர் விடுதலைப்போராட்டங்கள் பலவற்றில் பங்குபற்றிய பெருமையும் இவருக்குண்டு. விளையாட்டுத்துறையி லிறங்கி ஈழத்தமிழ் இனத்துக்கு பெருமை சேர்க்கும் இவர் இந்தியாவில் மலை யேறும் பயிற்சியையும் பெற்றவர். பாக்கு நீரிணையை நீந்துக் கடந்து சாதனை புரிந்து 'ஆழிக்குமரன்' எனும் பட்டத்தையும் பெற்றுக்கொண்டவர். ஆங்கிலக் கால்வாயை மூன்றுமுறை ஒரே தடவையில் நீந்திக் கடந்து தமிழனின் கீர்த். தியை உலகெங்கும் பரப்புவதற்கு திட்டமிட்டுள்ள இந்த இளைஞர், திடீ ரென்று ஆறு நாட்கள் தொடர்ந்து நடந்து அதிலும் சாதனையை நிலைநாட்டிக் கொண்டுவிட்டார். விளையாட்டுத்துறையில் இவருக்கு இருக்கின்ற துணிவும் விடா முயற்சியும் ஈழத்தமிழ் இளைஞர்களுக்கு அரசியல் துறையில் இன்று தேவைப்படுகிறது. சரி இனி ஆனந்தனின செவ்வியைப் படியுங்கள்...

கே:- ஆங்கிலக் கால்வாயை மூன்றுமுறை ஒரே வேளையில் நீந்திக் கடக்க வேண்டும் என்ற இலட்சியமுடைய நீங்கள் திடீரென நடந்து சாதனையை நிலைநாட்ட முற்பட்டதன் நோக்கமென்ன?

ப:- 1964 முதல் 1968ம் ஆண்டுவரை ஆங் கிலக் கால்வாயை இரண்டுமுறை கடந்து சாத

## கண்டோம் கருத்தறிந்தோம்!

னையை நிலைநாட்டவேண்டும் என்ற ஆர்வ முடன் இதற்கான வெளிநாட்டுச் செலா வணியைப் பெறுவதற்காக அரசாங்கத்திடம் பல தடவை முயன்றேன். எதுவித பலனும் கிடைக்கவில்லை. அதுபோக கடந்த வருடம் 52 மணிநேரம் நீந்தி சாதனையை ஏற்படுத்தி உலக சாதனைகளை பதிவுசெய்து வெளியிடும் ஏடான GUINNES BOOK OF RECORDS. ஸ்தாபனத்தாரே எனது சாதனையை தமது ஏட்டில் பதிவுசெய்த பின்னரும்கூட, லண்டன் வரை நான் நடந்து போகிறேன். ENGLISH CHANNEL SWIMMING ASSOCIATIONனில் தொடர்பு கொண்டு இச் சாதனையில் பங்குகொள்ளும் அந் நியச் செலாவணிக்கு மட்டும் அனுமதி தாருங் கள் என்று நான் கேட்டும்கூட இலங்கை அரசு எனது கோரிக்கையைப் புறக்கணித்த தால் விரக்தி ஏற்பட்ட நிலையில் இருந்தேன். அப்பொழுதுதான் சென்ற ஜூன் மாதம் ஹர்பான்சிங் என்பவர் ஆப்கானிஸ்தானில் 144 மணித்தியாலம் நடந்த செய்தியை பெரும் சாதனையாகபத்திரிகைகள் வெளியிட்டிருந்தன. இலங்கைப் பத்திரிகைகளும் அச்செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தன. எனவே தான் நானும் அச்சாதனையை முறியடிக்க வெண்ணி 147 மணி 20 நிமிடங்கள் நடந்து இச்சாதனையை நிலைநாட்டியுள்ளேன்.

கே:- நடக்கும் சாதனைமூலம் நீங்கள் பெற்ற அனுபவத்தைக் கூறமுடியுமா?

ப:- நீச்சலுக்காக, நடக்கும் பயிற்சியைக் கைக்கொண்டிருந்த எனக்கு சாதனையை நிலை நாட்டு முன்னர் எந்த அளவுக்கு நின்றுபிடிப்பேன் என்று என்னால் தீர்மானிக்க முடியாமல் இருந்தது. ஏனெனில் இதுவே எனது முதல் அனுபவமாயிருந்த படியால். அத்தோடு ஹர்பன்சிங் மிகவும் பாதுகாப்பான மாற்றமில்லாத சீதோஷ்ண நிலையில் தன் சாதனையை நிலைநாட்டினார். ஆனால் நான் பெற்ற அனுப



வம் வேறு. கடுமழையும், வெயிலும், பனியும் ஆறு நாட்களும் மாறிமாறி எனக்கு இடர் விளைவித்தன. இதுபோக இரண்டு தடவை காய்ச்சல் பிடித்துக்கொண்டது. மழை நீரில் என் காலணிகள் நனைந்த காரணத்தால் கொப்பளங்கள் கூட ஏற்பட்டன. ஹர்பன்சிங்கிற்கு கிடைத்த பாதுகாப்புகளும், ஆதரவும் எனக்குக் கிடைக்குமானால் தொடர்ந்து பதினொரு நாட்கள் நடந்து சாதனை நிலைநாட்டுவேன் என்று யாருக்கும் என்னால் சவால்விடமுடியும்.

கே:- இச்சாதனையை நிலைநாட்டுவதில் ஏதேனும் கசப்பான அனுபவங்கள்?

ப:- எமது விளையாட்டுக் கழகத்தின் மூலம் அரசாங்கத்திடம் நான் ஆதரவு கோரியிருந்தும் அவர்கள் எதுவித ஒத்துழைப்பும் தரவில்லை— அது தான் இல்லாவிட்டாலும் வெறும் பார்வையாளராகவென்றாலும் யாரேனும் ஒருவரை வந்து கலந்துகொள்ளும்படி கேட்டிருந்தேன். அதற்கும் இசையவில்லை. இறுதியில் நான் எடுக்கும் இம் முயற்சிக்கு ஆதரவு தெரிவித்து ஒரு கடிதமாவது தரும்படி கோரியிருந்தேன். எனது அந்த ஆசை கூடப் புறக்கணிக்கப்பட்டதுதான் வேதனைக்குரிய விடயம்!

கே:- இத்தகைய புறக்கணிப்பு ஏற்பட்டதற்கு அடிப்படைக் காரணம் என்னவாக இருக்கும் என நினைக்கின்றீர்கள்.

ப:- நான் தமிழகத்தில் தமிழனாகப் பிறக்காததுதான் என்று நினைக்கின்றேன். முன்னாள் தமிழக முதல்வர் மு. கருணாநிதிகூட இக் கருத்தை எனக்கு நேரடியாகவே தெரிவித்து என்னைப் பாராட்டியிருக்கிறார். உதாரணமாக முதன்முதல் பாக்குநீரிணையைக் கடந்த வங்காளியாகிய மிகிர்சன் என்பவருக்கு இந்தியா முழுவதுமே இன பேதமின்றி— வரவேற்பும், பாராட்டும், முக்கியத்துவமும் ஆதரவும் நல்கியிருந்தது.

கே:- சட்டத்தரணியாகிய நீங்கள் சட்டத்துறையிலா, சாதனையிலா அதிக ஆர்வம் காட்டுகிறீர்கள்.

ப:- சட்டத்துறையைவிட எனக்கு விளையாட்டுத்துறையில் சாதனை நிலைநாட்டுவதிலேயே மிக்க ஆர்வம். போக, எனது படிப்பை வைத்து வேறு நல்ல பதவிகளைக்கூட நான் தேடியிருக்கலாம். ஆனால் அரசாங்கத்தினிடமிருந்து ஏற்பட்ட அதிருப்திகளின் காரணத்தால் எந்த அரச உத்தியோகமும் செய்வதிலும் எனக்கு ஆர்வமில்லை. தனியார் துறைகளில் கடமையாற்றுவதற்குக்கூட அவற்றில் ஈடுபட்டால் எனது இந்த முயற்சிக்குத் தடையாகும் என்பதால் நான் முழுநேர விளையாட்டு வீரனாகத் திகழவே விரும்புகிறேன்.

கே:- அடுத்து நீங்கள் நிலைநாட்டவிருக்கும் சாதனை என்ன?



நடக்கிறார் ஆனந்தன்

ப:- ஆங்கிலக் கால்வாயை இரண்டு தடவைகள் நீந்தும் சாதனையை நிலைநாட்ட முன்பு நினைத்தேன். அரசின் ஆதரவின்மையால் தாமதமாகிவிட்டது. 1966ல் பிறேசிலை சேர்ந்த ஒருவரும் 1972ல் அமெரிக்கர் ஒருவரும் அதைச் செய்து முடித்துவிட்டார்கள். இனி மேல் அதை மூன்றுமுறை நீந்திக் கடக்கும் முதல் ஆள் நானாக இருக்கவேண்டும் என்பது ஒன்று. அது விரைவில் நிறைவேறும் என நினைக்கின்றேன். அங்கு செல்வதற்கான பிரயாணச் சீட்டை சவூதி அரேபியாவில் உள்ள எனது நண்பர்கள் எடுத்து அனுப்பியுள்ளார்கள். அத்தோடு இலங்கை Y. M. C. A. இங்கிலாந்தின் DOVER Y.M.C.A. யுடன் தொடர்பு கொண்டு என் சாதனையை நிலைநாட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். இலண்டன் முரசு பிரசுரத்தாரும் அதற்குவேண்டிய நிதி வசதிகளை செய்துதருவதாக வாக்களித்துள்ளனர். அதற்கடுத்த எனது இலட்சியம் உலகத்தை பாய்க்கப்பல் மூலம் தனித்து வலம் வரும் சாதனையைச் செய்தல். 1966ல் சேர் பிரான்சிஸ் சிச்சஸ்டர் எனும் ஆங்கிலேயர் முதன்முதல் ஒரு இடத்திலும் தங்காது சென்று இச்சாதனையை நிலைநாட்டினார். அதன்பிறகும் இருவர் முயன்று படகில் ஏற்பட்ட கோளாறால் ஒரு இடத்தில் தங்கியே இச் சாதனையை நிறைவேற்றியுள்ளனர். அதே சாதனையை நானும் தனித்து நிலைநாட்ட உள்ளேன். இப் பிரயாணத்தை முடிப்பதற்கு மொத்தம் 350 நாட்களாவது தேவைப்படும். இதற்கான

# நாவுக்கரசர் நவின்ற நமச்சிவாயமும் நமோ அரஹந்தாணமும்

பக்தி இலக்கிய காலம் பல்லவர் காலம். இக்காலத்தில் பல நாயன்மார்கள் தோன்றி பெருமளவிலாக பக்தி இலக்கியங்களை சிருஷ்டித்தனர். இக்காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆற்றிய அரும்பணியானது பக்தி இலக்கியத்தில் ஈடிணையற்றது என துணிந்து கூறலாம். நாயன்மார்களில் ஒருவராகிய திருநாவுக்கரசர் சைவராகப் பிறந்து, பல தேவாரங்களைப் பாடியதோடு, பின்னர் சொற்பகாலத்திற்கு சைவசமயத்தைவிட்டு விலகி தருமசேனர் என்ற பெயருடன் சமணசமயத்தில் சேர்ந்து பல சமணப்பதிகங்களை பாடியருளினார். திருநாவுக்கரசர் சையசமயத்தில் இருந்தபோது பாடியருளிய பதிகங்களைப் பலரும் நன்கறிவர். ஆனால் அவர் சமணசமயத்தில் இருந்தபோதும் பல பதிகங்களைப் பாடினார் என்பது பலருக்கும் பெரும் வியப்பை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. தோற்றத்தில் இவை தேவாரங்களைப் போலவே காணப்படுகின்றன. மேலெழுந்தவாரியாக நோக்கும் பலரும் இவற்றையும் தேவாரம் என்றே எண்ணிக்கொள்வர்.

முதற்கண் கீழ்க்காணும் நமச்சிவாயப் பதிகத்தை ஒருமுறை நோக்கிவிட்டு பின்னர், அதன்கீழ்க் காணப்படும் நமோ அரஹந்தாணப் பதிகத்தை நோக்கின் எவரது கண்களும் இரண்டையும் மாறி மாறி நோக்காது விடாது, என துணிந்து கூறலாம்.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே:

மேற்கண்ட நமச்சிவாயப் பதிகத்தை முழுக்க முழுக்க எமக்கு ஞாபகமூட்டும் வகையில் அமைந்துள்ளது கீழ்க்காணும் நமோ அரஹந்தாணப்பதிகம்.

பூவுக் கருங்கலம் பொங்கு செந்தாமரை
தேவர்க் கருங்கலம் திங்கள் முக்குடை
பாவுக் கருங்கலம் பஞ்ச மந்திரம்
நாவுக் கருங்கலம் நமோரஹந்தாணமே.

இந்த இரண்டு பதிகத்தையும் மாறி மாறி நோக்கின் அவை பெரும் வியப்பில் ஆழ்த்தும் என்பது வெள்ளிடைமலை. இந்த இரண்டு பதிகங்களும் ஒன்றையொன்று பகைத்து நின்ற இரு வெவ்வேறு மதங்களுக்காகப் பாடப்பட்டவையாகும். இவ்வாறு இருவேறு மதங்களுக்காக இரு வேறு பதிகங்களைப் பாடிய ஒருவராகிய அப்பர் சுவாமிகள் நம் அருந்தமிழுக்கு ஆற்றிய இச்சீரிய தொண்டானது பாரிய தொண்டு என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. ஆனால் இன்று சமணசமயத்தைப் பேணுவோரின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துகொண்டு செல்வதால் இன்று இந்தப் பதிகங்களும் வழக்கொழிந்து சென்றுகொண்டிருக்கின்றன. அப்பர் அருளிய இப்பதிகங்களும் அழிந்து தமிழ் இலக்கிய உலகம் இழப்பிற்குள்ளாகாது பேணல் தமிழன்பர் தம் கடமையன்றோ!

—பொன். பூலோகசிங்கம்.
(கொழும்பு வளாகம்)

---

பாய்க்கப்பலைச் செய்வதற்கு என்னிடம் போதிய பலமில்லை. ஆனால் ஆங்கிலக் கால்வாயை மூன்று தடவை ஒரே முறையில் நீந்திக் கடந்து அச்சாதனையை ஏற்படுத்துவதன்மூலம் வெளிநாடுகளிலேயே இச்சாதனைக்கான பாய்க்கப்பலைச் செய்ய உதவிபெறலாம் என நினைக்கின்றேன். அதிர்ஷ்டமும் என்பக்கம் இருக்குமானால் எனக்கு 40 வயது முடிவதற்குள் இச்சாதனையை நிலை நாட்டுவேன். மற்றவற்றைப் போலல்லாது இதற்கு மிகவும் மனத்துணிவு தேவை. ஏனென்றால் கடந்த ஐந்து வருடத்தில் இம்முயற்சியில் ஈடுபட்ட மூவரின் சரித்திரமே தெரியாமல் போய்விட்டது.

கே:- சுதந்திரன் சுடர் படிக்கும் வழக்கம் தங்களுக்குண்டா அவைபற்றி உங்கள் எண்ணம்.

ப:- படிப்பதுண்டு. சுடர் தரமான இலக்கிய சஞ்சிகை, சுதந்திரன் ஈழத்தமிழினத்திற்காகப் பாடுபடும் ஒரே இதழ். அதன்மீது தனிப்பட்ட மதிப்புவைத்துள்ளேன்.


கே:- சுடர்மூலம் வாசகர்களுக்கும் தங்கள் ஆதரவாளர்களுக்கும் நீங்கள் கூறவிரும்புவது?

ப:- நாம் நினைத்தால் முடியாதது என்று ஒன்றுமில்லை— தமிழ் இளைஞர்கள் எந்தத் துறையிலாவது கைக்கொண்ட இலட்சியத்திற்காக தளராது முயற்சி செய்தால் வெற்றி கிட்டுவது நிச்சயம்.

செவ்வி கண்டவர்:- நாவண்ணன்

# உணர்வுகள் ஒலிக்கட்டும்

செல்வி தமிழ்ப்பிரியா



மெல்ல இடையை அசைத்து, ஒயிலாக நடைபுரியும் பெண்ணின் நளினம்போல் அன்ன நடை பயின்றுகொண்டிருந்தது காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த மெயில் வண்டி. யன்னல் ஓரமாக அமர்ந்திருந்த என் பார்வை வெளியே தாவியோடியது. ஆதவன் மெல்ல அடங்க காரிருள் போர்வையாக கவிழ்ந்துகொண்டிருந்த கோலம்...! நீண்ட வானத்தில் ஆங்காங்கே கண்சிமிட்ட ஆரம்பித்த தாரகைப் பூக்கள்...! அதையே மீண்டும் மீண்டும் பார்த்துக்கொண்டிருக்கப் பொறுமையற்ற என்பார்வை உள்ளே திரும்பியது. கையில் அடைக்கலம் புகுந்திருந்த "அர்த்தமுள்ள இந்து மதத்தில்" என் கவனத்தை பதிய வைக்க ஆரம்பித்தேன். எத்தனைமுறை படித்தாலும் அலுக்காத அருமையான தத்துவக் கட்டுரை...! அத்தனை கருத்துக்களையும் மனதில் தேக்கி- அதன் வழி ஒழுக வேண்டும் என்ற எண்ணத்தை தோற்றுவிக்கும் கண்ணதாசனின் கருத்துரையில் மனம் முழுமையாக லயித்துப்போய்விட்டது. விரலசைவில் பக்கங்கள் புரள நிதானமாக பதிந்துகொண்டிருந்த என் பார்வை திடுமென அந்தப் பக்கத்தில் அகல மறுத்து நிலையாக நின்றுகொண்டது.

"தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால், மகளைப் படிக்கட்டில் பார்க்க வேண்டாம்."

உதட்டின் மெல்லிய முணுமுணுப்பில் மீண்டும் மீண்டும் புகுந்துகொண்ட இந்த அடிகளைப் பற்றியே பின் மனம் சிந்திக்க ஆரம்பித்தது. "தாயைத் தண்ணீர்த்துறையில் பார்த்தால், மகளைப் படிக்கட்டில் பார்க்க வேண்டாம்" என்பது எந்த அளவில் உண்மையானது? மனம் இந்த அடிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டும் போல் அவசரப்பட்டது. "தேவையற்ற வீண் ஆராய்ச்சி எனக்கு எதற்கு?" என ஒதுங்கிக்கொள்ள முனைந்தும்— கொடியாக மனதைப் பற்றிச் சுற்றி நின்ற அந்த அடிகளை ஒதுக்கித்தள்ள முடியவில்லை. மீண்டும் மனம் சிந்தனையில் மூழ்கிப்போய்விட்டது. பார்வை மட்டும் அந்தப் பக்கத்திலேயே தயங்கி நிற்க சிந்தனை மட்டும் நழுவி, நழுவி— ஆராய்ச்சி செய்வதிலேயே முனைந்துகொண்டிருந்தது.

ரெயிலில் பிரயாணம் செய்பவர்கள் வரிசையில் ஏறுபவர்கள்... இறங்குபவர்கள்... அந்த வகையில் என் எதிரில்அமர்ந்துகொண்டவர்களைக்கூட நான் அவதானிக்கவில்லை. மனம் முழுமையாக அந்த அடிகளைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தது. "தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால், மகளைப் படிக்கட்டில் பார்க்க வேண்டாம்" என்றால்... எந்த வகையில்?

ஒரு சிறந்த தாயைப் போல மகள் இருப்பாள் என்பதற்காக - இப்படி ஒரு அடிகளை உபயோகித்திருக்க முடியாது. "தண்ணீர் — படிக்கட்டு" என்பதன் அர்த்தமென்ன? மனம் அமைதியை விட்டு நழுவி நின்றுகொண்டே ஆராய்ச்சி செய்தது. இந்த அடிகளைப் போலவே — சமூகத்தில் எல்லாத் தாயும் சேயும் இருப்பார்களா? விலக நினைத்த நினைவுகளை ஒன்று கூட்டி - சமூகத்தில் இந்த அடிகளுக்கு எதிரான ஒரு தாயையும் மகளையும் பார்க்க முடியாதா? என சிந்தனையைச் சுற்றிப் பார்த்தேன். எந்தவிதமான முடிவுமே என் சிந்தனைக்குக் கிடைக்கவில்லை.

"மிஸ்! எக்ஸ்கியூஸ்மீ! என்ன புத்தகம் இது?. இவ்வளவு அக்கறையாக படித்துக்கொண்டிருக்கின்றீர்கள்!"

குரல் கேட்டு டக்கென சிந்தனையைக் கலைத்துவிட்டு நிமிர்ந்தேன். என் எதிரே ஓர் அழகிய இளம்பெண் புன்னகை ததும்ப அமர்ந்திருந்தாள். என் சிந்தனையின் வேகம் - அவள் வந்து

அமர்ந்ததைக் கூடக் கவனிக்க வில்லை. "இது ஒரு கட்டுரைப் புத்தகம்தான். ஆனால் மிக அருமையான - பயனுள்ள கட்டுரை. மிக அழகாக சமூகத்தின் தொடர்பை ஒரு கட்டுரை மூலம் என் முன் காட்டியிருக்கின்றார் இதன் ஆசிரியர்.."

கூறிக்கொண்டே - அந்தப் பக்கத்தின் அடையாளமாக ஆள்காட்டிவிரலை நுழைய விட்டபடி புத்தகத்தை மூடிக் கொண்டேன்.

"சுவாரசியமாக - ஆழ்ந்து படித்துக்கொண்டிருந்த உங்களைக் குழப்பிவிட்டேனா?"— அவள் இள நகையினூடே கேட்டாள்.

"நோ... நோ... அப்படியொன்றும் இல்லை. பேச்சு துணைக்கு ஆள் கிடைக்கவில்லை. அதனால்தான் புத்தகத்திலேயே கவனத்தைச் செலுத்தினேன். இப்போதான் பேச்சுத் துணைக்கு நீங்கள் கிடைத்திருக்கின்றீர்களே!"

அவள் ஒரு தினுசாக என்னைப் பார்த்தாள். இவ்வளவு ஆண்கள் இருக்கின்றார்களே! பேச்சுத்துணைக்கு ஆள் கிடைக்கவில்லை என்று கூறுகின்றாளே...என்ற வியப்போ என்னவோ...

"நீங்கள் எங்கே வேலை பார்க்கின்றீர்கள்?" மிக மென்மையாக அறிமுகப் பேச்சை ஆரம்பித்தாள் அவள்.

"நான் வேலை பார்ப்பதில்லையே!" சிரித்தபடி கூறினேன் நான். "உண்மையாகத்தான் சொல்கின்றீர்களா?" ஆச்சரியத்துடன் கேட்டாள் அவள்.

"ரெயிலில் பிரயாணம் செய்பவர்கள் எல்லாம் வேலை பார்ப்பவர்கள் என்று நீங்கள் முடிவு செய்தால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்?"

"அப்படியில்லை. உங்களைப் பார்த்தால் வேலை பார்ப்பவராகத் தெரிகிறது. அதனால்தான் கேட்டேன்." என்றாள் அவள்.

நான் 'களுக்' எனச் சிரித்தேன். "நல்ல வேடிக்கைதான். வேலை பார்ப்பவர்கள்... பார்க்காதவர்கள் என முகத்தில் ஒட்டியிருக்கின்றதா? என்ன?"

அவள் கதையை திசை திருப்பினாள். ஏதோ ஒரு கலைஞனை நிறுத்தி வைத்து 'செவ்வி' காண்பவள் போல் சிறிய சிறிய கேள்விகளாகக் கேட்டுக் கொண்டுவந்தவள்—" உங்கள் பெயரைக் கூறவில்லையே என்றாள். "தமிழினி" என்றேன்

## பெண்டாட்டிக்கு கட்டுப்படாதவர்!

சொர்க்க வாசலில் இரண்டு விளம்பரப் பலகைகள் தொங்கின. "தங்கள் மனைவிக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள் இங்கே நிற்கவும்" என்று முதலாவது விளம்பரப் பலகையிலும், "மனைவிக்குக் கட்டுப்படாமல் இருப்பவர்கள் இங்கே நிற்கவும்" என்று இரண்டாவது விளம்பரப் பலகையிலும் அறிவித்தல் காணப்பட்டன.

இரண்டாவது விளம்பரப் பலகை அருகே ஒருவர் நிற்பதைக் கண்ட மற்றொருவர் 'ஏன் இங்கே நிற்கிறாய்?' என்று அவரிடம் கேட்டார். அந்த மனிதரோ மிகவும் சாவாதானமாக இவ்வாறு கூறினார்:

''ஏனோ தெரியாது. என மனைவி இதிலே நிற்கச் சொன்னாள். நிற்கிறேன்!''

மெதுவாக. மிக்க ஆச்சரியத்துடன் என்னை நோக்கியவள்- "நீங்கள்... நீங்கள்தான் எழுத்தாளர் தமிழினியா?" பிரமிப்புடன் கேட்டாள் அவள்.

அவள் கேள்வியை ஆதரிக்கும் புன்னகையை மட்டும் உதிர்த்தேன். திடீரென என் கரங்களைப் பற்றிக் குலுக்கியவள்— "என் அபிமான எழுத்தாளராகிய உங்களைச் சந்திப்பேன் என்று நான் கனவில்கூட எண்ணிப் பார்க்கவில்லை. உங்களுடைய விசிறி நான். ஒரு சிறந்த எழுத்தாளராகிய நீங்கள் சற்றுகூட பெருமையில்லாது பழகுவதைப் பார்க்க எனக்கு ஆச்சரியமாகவே உள்ளது." என்றாள் வியப்புத் தோய்ந்த குரலில்.

"எழுத்தாளர் என்றால்... அவர்களுக்கு என்ன கொம்பா முளைத்திருக்கின்றது? அவர்களும் மனிதர்கள் தானே! தன்னைத்தானே பெருமைப்படுத்தி, தலைக்கனம் கொள்வது அழிவிற்குத்தான் பாதை அமைக்கும். எழுத்தாளன் திரியாயின்-வாசகன் எண்ணெய்யல்லவா? அந்த வாசகர்களைப் புறக்கணித்தால் பெருமைக்கே இடமேது?"

என் பேச்சு மேலும் அவளுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்ததோ... என்னவோ... சில விநாடி என்னையே இமைவெட்டாது நோக்கியவள்— "என் அபிமான எழுத்தாளராகிய உங்களைச் சந்தித்ததில் என் மனம் எவ்வளவு பெருமைப் படுகின்றது தெரியுமா?" என்றபடி மீண்டும் என் கரங்களை தன் கரத்துடன் இணைத்துக் கொண்டாள்.

பேச்சு தொடர்ந்தது. தனக்குப் பிடித்த என் கதைகள் பற்றி - அந்த கதாநாயகிகள் பற்றி அவள் பகுதி பகுதியாக விமர்சனம் செய்தபோது... எனக்கே பெரிய ஆச்சரியமாக இருந்தது. ஒவ்வொரு கதையையும் எவ்வளவு அழகான நோக்குடன் படித்து, நினைவில் பதியவைத்து விமர்சனம் செய்கின்றாள். அவளின் ஆணித்தரமான விமர்சனத்தை மௌனமாக கேட்டுக்கொண்டிருந்தேன். இவ்வளவு திறமையான ஒருத்தி - என் ரசிகையாக இருக்கின்றாளே... என்பதை எண்ண மனம் சற்று பெருமையில் பூரித்தது.

"உங்கள் கதைகள் எல்லாவற்றையுமே நான் படித்திருக்கின்றேன் மிஸ். அந்தக் கதைகளின் கதாநாயகர்கள் இயற்கையின் நிழலோட்டமா? இல்லை செயற்கையின் பிம்பங்களா? உயிர்த்துடிப்பான ஒவ்வொரு கதைகளையும் எந்த

வகையில் உருவாக்குகின்றீர்கள்?" மிக்க ஆர்வத்துடன்கேட்டாள் அவள்.

"என் பார்வையில் படும் ஒவ்வொரு காட்சிகளையும் கருவாக்கி - அத்துடன் கற்பனையையும் இணைத்துச் சுழல விடுகின்றேன். யதார்த்தமான கதைகள் தான் உயிர்த்துடிப்புடன் மிளிரமுடியும்." அவளின் கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் பதில் சொல்வதில் கூட எனக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது.

"ஆமாம்! யதார்த்தமான காட்சிகள் தான் கதையாகவேண்டும். அதில்தான் துடிப்பு இருக்கும். அதுதான் ஒவ்வொரு இதயங்களையும் விழிக்கச் செய்யும்."



உதட்டின் முணுமுணுப்பில் மெல்லிய சப்தங்களாக தெறித்து ஓய்ந்த அவளின் வார்த்தைகள்...! வண்ண கோலம் போட்டதுபோல், புன்னகை சிந்திக்கொண்டிருந்த அவள் வதனங்களில் ஏனிந்த மாற்றம்? புரியாது விழித்தேன் நான்.

ஏதோ பயமான சிந்தனையில் ஆழ்ந்தவள்போல் பார்வையை வெளியே ஓடவிட்டவள் திடுமெனத் திரும்பினாள். "உங்கள் கதைக்கு நான் ஒரு "கரு" கூறட்டுமா? என் வரலாறே ஒரு யதார்த்தமான- உயிரோட்டமான கதையாக அமையும்."— உற்சாகமெல்லாம் பறந்து போய் விட்ட நிலையில், தளதளத்துச் சரிந்தன அவள் வார்த்தைகள்.

தாளமுடியாத வேதனை அவள் இதயத்தை தீயாகத் தகித்துக்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இந்த இளவயதில் அவள் இதயத்தைச் சூழ்ந்துகொண்ட துயரம்தான் என்ன? பருவ உணர்வுகள் வரைந்த காதல் தோல்வியா? இல்லை...? வாழ்வின் ஆரம்பப்படியில் மெல்லிசை தவழ நிற்கவேண்டியவள் விரக்தியில் தோய்ந்து, துயரமே உருவாக ஏன் நிற்க வேண்டும்? என் சிந்தனை பல்வேறு கோணங்களிலும் சுற்றிச் சுற்றி விடையறிய முனைந்து தோற்றுப்போன நிலையில் மெதுவாக நிமிர்ந்து அவளைப் பார்த்தேன்.

நயனத்தின் விளிம்பில் கோத்து நின்ற கண்ணீர்த் துளிகள் வெளியே சிந்தத் தயாராகிக் கொண்டிருந்தன. "யதார்த்தமான காட்சிகள் தான் உயிர்த்துடிப்பான கதைகளாக மிளிர முடியும்:" என்ற அடிகள் ஏன் அவள் மனத்தை இப்படி வதைக்க வேண்டும்? அப்படி... அவள் மனதைச் சாறாகப் பிழிகின்ற ஒரு நிகழ்ச்சி அவளுக்குள்ளேயும்- அதுவும் இந்த இளம் வயதிலேயே நடந்திருக்கின்றதா? புரிந்து கொள்ள முடியாத புதிராக என் முன் நின்றாள் அவள்.

ஒரு நீண்ட பெருமூச்சில் மனதைச் சற்று சமாதானப் படுத்திக்கொண்டவள் போல் மெதுவாக பேச ஆரம்பித்

# சப்பாத்து திருத்தப்படுகிறது!

தனது பழைய பெட்டியொன்றைக் கிளறிக்கொண்டிருந்தபோது ஒன்பது வருடங்களுக்கு முந்திய பழைய 'பில்' ஒன்றை ஒருவன் கண்டான். அவன் தனது சப்பாத்துக்களை 'றிப்பயர்' செய்வதற்கு கடையில் கொடுத்தபோது, கடைக்காரன் கொடுத்திருந்த துண்டு அது. ஒன்பது வருடங்களுக்கு முந்திய அந்தத் துண்டை எடுத்துக்கொண்டு கடைக்காரனிடம் ஓடினான் அவன். கடைக்காரன் அத்துண்டை வாங்கிக்கொண்டு கடையினுள் சென்று பத்து நிமிடங்கள் கழித்து வெளியே வந்தான்.

"சப்பாத்துக்களை கண்டுபிடித்துவிட்டாயா?" என்று கேட்டான் சப்பாத்துச் சொந்தக்காரன்.

"ஆம் கிடைத்துவிட்டன. அடுத்த வெள்ளிக்கிழமை அவற்றின் 'றிப்பெயர்' முடிந்துவிடும்" என்றான் கடைக்காரன் சாவதானமாக!

— — — — — — — — — — — — — — — — — — — — — — — —

தாள் அவள். "சமூகத்தில் அன்னையை வெறுத்த பிள்ளையைக் காணலாம். ஆனால்— பிள்ளையை வெறுத்த அன்னையை நீங்கள் கற்பனையிலாயினும் கண்டிருக்கின்றீர்களா?" தாளமுடியாத வேதனையுடன் வெளிப்பட்டது அவள் கேள்வி.

ஒரு விநாடி! அவள் கேள்வியால் அதிர்ந்துபோய்விட்டேன் நான். பல்வேறு பாத்திரங்களை புதிய புதிய சூழ்நிலையில் உலாவவிட்டு கதையாக்கும் நான்— அவளின் இந்தக் கேள்விக்கு பதில் கூற முடியாது திணறினேன். என் மௌனத்தை நீடிக்கவிடாது— பதிலையும் தானே உதிர்க்க அவசரப்படுபவள் போல் சொன்னாள் அவள்.

"பெற்ற பிள்ளையை வெறுக்கும் ஒரு அன்னையை என் நிஜ வாழ்க்கையில் சந்தித்தேன். எந்த ஒரு எழுத்தாளனாலுமே கற்பனை செய்து பார்க்க முடியாத நிகழ்ச்சி என்னுள்ளே நடந்துகொண்டிருக்கிறது. அணுஅணுவாக என் இதயத்தைத் தகித்துக் கொண்டிருக்கும் அது— மற்றவர்கள் முன் ஒரு உயிர்த்துடிப்பான,— சுவாரசியமான கதையாகலாம்..."

இமைகளின் அருகில் கசிந்த நீர்த்துளிகளை மெதுவாகத் தட்டிவிட்டவள்— விம்மிய இதழ்களை பற்களுக்கிடையில் அமிழ்த்தி, வெள்ளிவரத் துடித்த விம்மல்களை—வெளியே சிதற விடாது வெகு பிரயாசைப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டு மீண்டும் தொடர்ந்தாள்—

"ஒரு அன்னையின் அரவணைப்பிற்காக— ஆரம்பகாலம் தொடக்கம் நான் ஏங்கித் தவித்த நாட்கள் எத்தனையோ! வாழ்வில் எதையும் இழந்துவிடலாம். எதுவும் கிடைக்காமல்கூடப் போகலாம். ஆனால்... அன்னையின் புறக்கணிப்பை எப்படித் தாங்கிக்கொள்ளமுடியும்? அம்மா! என்று அலறுகின்ற என் ஆத்மாவின் ராகம்- எனக்குள்ளேயே கொடூரமாக அழிக்கப்பட்டது. அன்னையின் அலட்சியப் பார்வையில்— கடமைக்காக வளர்க்கப்படும் ஒரு பிள்ளையாக நான் வளர்க்கப்பட்டேன். பிஞ்சுப் பருவம் முதலே ஏக்கத்துடன் உறவாடிய து மனம். அன்பான அரவணைப்பிற்கும், ஆறுதல் வார்த்தைக்கும் துடித்த மனம்...! அந்த துடிப்புக்கள் எல்லாம் கனவாகத் தொடர... அந்த தொடருடன் இணைந்து காலம் ஓடியது. ஏக்கங்கள்... சிந்தனைகளுடன்... அறிவும் உருவம் பெற்று வளர்ந்தது. நான் சுயமாக— சுதந்திரமாகச் சிந்தித்தேன். "ஒரு அன்னை— பத்துத் திங்கள் சுமந்து, சாவின் எல்லைக்கே போய்— பெற்றெடுப்பவள்— அந்தப் பிள்ளையை ஏன் வெறுக்க வேண்டும்?"

உள்ளத்தில் எழுந்து நின்ற ஆற்றாமை வேகத்தில் உணர்ச்சியுடன் வார்த்தைகளை கொட்டிக்கொண்டு வந்தவள்— என்னிடமே பதிலை தேடுபவள் போல் சொன்னாள்—

"அம்மா! உனக்கு ஏன் இந்தப் பாராமுகம்? நான் மட்டும் உன் பிள்ளையில்லையா? தந்தை! அவர் புறக்கணிப்பதைக்கூட ஜீரணித்துவிடலாம். ஆனால்— அரவணைக்கவேண்டிய நீயே புறக்கணிக்கும் போது தானம்மா நான் அணுஅணுவாக வெந்து சாகின்றேன்..." என் நெஞ்சில் நிறைந்து நின்ற வேதனையை ஒரு நாள் இருவர் முன்னும் கொட்டித்தீர்த்தேன்.

"உன் அன்னையை 'தியாகம்' என்ற போர்வையில்தான் நான் மனைவியாக்கிக்கொண்டேன். அப்படியிருக்க— உன்னில் எனக்கு பாசம் வரவேண்டிய அவசியமேயில்லை..." என் வேதனைக் கேள்விக்கு வெறுப்புடன் பதிலை உமிழ்ந்தார் தந்தை.

ஒரு விநாடி! என் சிந்தனை அசையமறுத்து ஸ்தம்பித்துப் போய்விட்டது. அப்படியாயின் நான்... நான்...? என் அறிவில் பளிச்சிட்டு மறைந்த ஒரு மின்னல் கீற்று...! எனக்கு எல்லாமே தெளிவாகப் புரிந்தது. அன்னையைத் திரும்பிப் பார்த்தேன். சுட்டெரித்து விடுபவள் போல் என்னை முறைத்துப் பார்த்தாள்.

"அம்மா! சுட்டெரிப்பவள் போல் பார்க்க நீ ஒன்றும் கற்புக்கனல் கண்ணகியல்ல. பரமனைப் பார்த்து நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றமே குற்றம் என்றானும் நக்கீரன். என்னைப் பெற்ற அன்னையென்றாலும் நீ செய்தது தவறு தானம்மா. நீ தவறியவள். நான் தவற்றின் சின்னம்." சீற்றத்துடன் ஒலித்து ஓய்ந்த என் வார்த்தைகளின் பின்— நான் விலகி விலகி நடந்தேன். என் மனம் ஆறாத காயமாக வலித்தது.

கண்ணகியைப்பற்றி, அருந்ததியைப்பற்றி, வாசுகியைப் பற்றி படித்து படித்து உள்ளத்தில் பண்பையே வளர்த்து வைத்திருந்த என்னால் இந்த

## கணைகள்

### பெருச்சாளி

கொட்டும் கரத்திடை
அறங்கள் முழக்குவார்
கூட்டந்தன்னிலே பேச்சாளி!
வாழ்வில்
திட்டமிட்டேழையர்
பொருளைத் திருடுவார்!
தீயர் இவர் பெருச்சாளி.

—காசி ஆனந்தன்

---

உண்மையைத் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.

மது வெறியில்— தந்தை ஸ்தானத்தில நின்றவர் சொன்னதை— சுயநினைவோடு நின்ற அன்னை ஆட்சேபித்திருந்தால்... என் அன்னையை ஒரு புனிதத் தெய்வமாக போற்றியிருப்பேன். அவளும்— மௌனமாக— ஒரு குறுகிய மனப்பான்மையோடு ஏன் ஒதுங்கிச் செல்ல வேண்டும்?

அன்னையின் அன்பிற்காகவே ஏங்கி, ஏங்கி அழுத என் நெஞ்சம்— அதன் பின் அதை நினைத்துப் பார்க்கவே மறுத்தது. எங்கேயாவது ஒதுங்கிவாழ ஆசைப்பட்டு நடந்தேன்.

சின்னஞ்சிறு பருவம் முதலே வாழ்க்கையில் வேதனையை விதைத்துவிட்ட இறைவன்— கல்வியறிவில் மட்டும் என்னை மேன்மைப்படுத்தினான். அந்த மேன்மை என்னை ஒரு உயர்ந்த ஆசிரியை ஸ்தானத்தில் நிறுத்தி வைத்திருக்கிறது.

* * *

தன் வரலாற்றை உணர்ச்சி வேகத்தில்— என் முன்னே கொட்டியவள் ஏதோ ஒரு திருப்தியை அணைத்துக் கொள்ள விரும்புகின்ற பாவனையில் இமைகளை மெதுவாக மூடிக்கொண்டாள். கண்கள் கசிந்து உருண்டன. மனக்கசப்பின் நெருடல்களாக.

"அப்போ உங்கள் எதிர்காலம்?" மெதுவாகக் கேட்டேன் நான். வாய்விட்டு விரக்தியாய் சிரித்தாள் அவள். "எனக்கு இனி என்ன எதிர் காலம்? ஓலைக் குடிசையில் என்றாலும்— அன்பாய், அமைதியாய் வாழத்தான் நான் ஆசைப்பட்டேன். ஆனால்... இப்படி ஒரு களங்கம் எனக்குள்ளேயே இருக்கும்போது— வாழ்வைப்பற்றி நினைக்க எனக்கு என்ன அருகதையிருக்கிறது? என் மனத்தில் போற்றி வைத்த காவியப் பண்புகள் என்னவது? என் மனத்தின் சத்திய நெருப்பில்— என் உணர்வுகள், ஆசைகள் எல்லாவற்றையும் கருக்கிவிட்டு ஒரு புனிதமானவளாக என்னால் வாழ்ந்துவிடமுடியும். வரண்டு போய்விட்ட உணர்வுகளை மீண்டும் மீண்டும் மீட்டிப் பார்க்கின்ற அளவிற்கு பெலவீனப்பட்டதல்ல என் மனம். அது ஒரு நெருப்பு..."

தாங்கமுடியாத மன வேதனையில் ஒடுங்கிப்போய் ஒலித்த அவள் வார்த்தைகள் வளர்ந்து சரிந்தன. இத்தனை நேரமும் வெகு பிரயாசைப்பட்டு கட்டுப்படுத்தி வைத்திருந்த துயரம் விம்மலாக வெளிச்சிதறியது. விம்மி விம்மியழுதாள் அவள். கண்களில் இருந்து அருவியெனக் கொட்டிய கண்ணீர்த்துளிகள்...! என் கண்களும் கசிந்தன. அவளை மெதுவாகச் சமாதானப்படுத்தினேன்.

யன்னலினூடே படர்ந்த என் பார்வை வானப் பெருவெளியில் பதிந்து நிலைத்தது. ஓடிச் செல்லும் கார்மேகக் கூட்டத்தின் மத்தியில்...வெண் மலர்ப்பூக்களாக ஒளிசிந்தும் தாரகைகள்...! இருண்ட வான் பரப்பில் எதையுமே தேட முடியாது பார்வையை உள்ளே திருப்பினேன். அவள் விரக்தியுடன் சற்று பலமாக வாய்விட்டுச் சிரித்தாள். "என்ன? இருட்டைப் பார்க்க உங்களுக்கு சலிக்கிறதா? ஒளியில் இருக்கிற உங்களுக்கு இருட்டைப் பார்க்க சலிக்கலாம். ஆனால்— இருளினிலேயே இருக்கிற எனக்கு ஒளியைத்தான் சகிக்கேலாது பிஞ்சுப் பருவத்திலிருந்து சூன்யத்தையே பார்த்துப் பார்த்து பழகிப்போய்விட்டது எனக்கு..." இப்போ அவள் பார்வையை இருண்ட வான் பரப்பில் செலுத்தினாள். அந்தச் காரிருளில் அப்படி எதைத்தான் தேடுகின்றாள்? நிம்மதியையா?

அவள் உள்ளத்தின் தகிப்பு எனக்குப் புரிந்தது. பண்பையே மதித்து வாழவேண்டும் என் ஆசைப்படுகின்ற ஒரு பெண்ணின் ஆரம்பப் பகுதி— பண்புகளின் சாவில்தான் உருவாகியிருக்கிறது என்பதை அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவ்வளவுதான்.

நழுவமுடியாது, ஒரு மெல்லிய பூங்கொடியாக— இதய அரங்கில் சுற்றிச் சுற்றி நடம் புரிந்த அந்த அடிகள்... மீண்டும் என் நினைவின் முன் ஓடி வந்து நின்றது. "தாயைத் தண்ணீர்த்துறையில் பார்த்தால், மகளைப் படிக்கட்டில் பார்க்க வேண்டாம்."

அப்படியாயின் இவள் மட்டும் ஏன் படிக்கட்டிலேயே நின்றுகொண்டிருக்கிறாள்? தாய் தண்ணீருக்குள் நிற்கின்றாள் என்பதற்காக எல்லா மகளும் தண்ணீரினுள்ளேயே இறங்கிவிடுவார்கள் என்று திடமாக கூறிவிட முடியாது. என் ஆராய்ச்சிக்கு ஒரு எதிரான கதாநாயகி விடையாகக் கிடைத்திருக்கின்றாள். என் சிந்தனை வீண்போகவில்லை. இப்படி பண்பு குலையாத ஒருத்தியை இந்த அடிகளின் மிக அண்மையில் நிறுத்திவைத்துப் பார்த்துக்கொண்டேன்.

பண்பு! அது வாழவேண்டுமாயின், பண்பைப் போற்றுகின்ற இந்த கதாநாயகி போன்றவர்கள் வாழவேண்டுமாயின்— மன உணர்வுகள்! அதுதான் விழிக்கவேண்டும். வெறும் ஆசைகளுக்கு அடிபணிந்து— தவறுகளைச் செய்யத் தூண்டும்— அந்த தாழ்வான மன "உணர்வுகள் விழிக்கட்டும்." அந்த உணர்வின் விழிப்பில்தான் பண்பு வாழ முடியும்!

---

## கணைகள்

### பார்வதி

பக்கத்து வீட்டானைப்
பற்றியே எந்நாளும்
பார்வதியாளுக்குப் பேச்சு
பக்கத்து வீட்டாளோர்
அட்டியல் வாங்கினாள்
பார்வதியாள் உயிர் போச்சு

—காசி ஆனந்தன்



# நோய்க்கு இடங்கொடேல்

## இரத்தப் புற்றுநோயைத் தீர்க்கும் அதிசய மூலிகை!

உயிர்க்கொல்லிநோயான இரத்தப்புற்று நோயை தமிழ் நாட்டில் கிடைக்கும் மூலிகைச் செடி அடியோடு குணப்படுத்துகிறது என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. வியட்நாம் நாட்டில் இந்தச் செடியைப் பயன்படுத்தி பதினைந்தே நாளில் ஒரு வாலிபரை டாக்டர்கள் குணப்படுத்தியுள்ளனர்.

இந்த அதிசய மூலிகையைத் தேடி காடுகளுக்கோ, மலைப் பகுதிகளுக்கோ போகத் தேவையில்லை. நமது கிராமப் புறங்களில் கிடைக்கும் 'பீநாறிச் செடி' என அழைக்கப்படும் ஒருவகைச் செடியே இரத்த புற்றுநோய் தீர்க்கும் மூலிகையாகும்— இந்தச் செடியின் பெயர் 'நித்திய கல்யாணி' என்பதாகும். தமிழ் நாட்டில் நெல்லை, ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் வரண்ட பகுதிகளில் தரிசுக் காடுகளில் இது பெருமளவு காணப்படுகிறது.

வெள்ளை நிறமாகவும், ஊதா சிவப்பு கலந்த 'பிங்க்' நிறமாகவும் பூக்கும் இரு வகை செடிகள் இதில் உள்ளன. இந்தச் செடி மிக உயர்ந்த மூலிகைச் செடி என்று இப்போது சர்வதேச அளவில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இரத்த அழுத்தம் போன்ற நோய்களை குணப்படுத்துவதுடன், இரத்தப் புற்று நோயையும் இது அற்புதமானவகையில் குணப்படுத்துகிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரத்தப் புற்றுநோய் கண்ட ஒரு வாலிபருக்கு இந்தச் செடியின் சாற்றை கொடுத்ததில் நான்கு நாட்களில் அவர் உடலில் உள்ள சிவப்பு அணுக்கள் அதிகரித்து வெள்ளை அணுக்கள் குறைந்தன என்பதை டாக்டர்கள் கண்டார்கள்.

"15 நாட்களில் அந்த வாலிபர் முழுக் குணமடைந்து வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டார்" என்று வியட்நாம் செய்தி நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது.

இந்த மூலிகை தமிழ் நாட்டில் ஏராளமாகக் கிடைப்பதால், வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து பெருமளவு அந்நிய செலாவணி சம்பாதிக்க நல்ல வாய்ப்பு உள்ளது.


அரளி, சர்ப்பகாந்தி, ஆகிய செடி இனங்களைச் சேர்ந்தது 'நித்திய கல்யாணி' என்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கில மருத்துவத்தில் இன்னும் சரியான மருந்து கண்டுபிடிக்கப்படாத ஆட்கொல்லி நோயான ரத்தப் புற்றுநோயை பீநாறிச் செடியின் இலைகள் குணப்படுத்துவதாக வியட்நாம் நாட்டைச் சேர்ந்த டாக்டர்கள் நிரூபித்துள்ளனர்.

## மயிர் உதிர்கிறதா? இதோ மருந்து

முக சவரம் செய்துகொண்ட பின்னர் பயனின்றித் துருப்பிடித்துக் கிடக்கும் பிளேடுகளையெல்லாம் ஒன்று சேருங்கள். ஒரு கண்ணாடிக் கிண்ணத்தில் தண்ணீர் விட்டு அதில் ஓரளவு உப்பும் போட்டுக் கரைத்துக் கொண்டு; அந்தக் கரைசலில் துருப்பிடித்த பிளேடுகளைப் போட்டு நன்றாக ஊற வைக்கவும். ஒவ்வொரு முறை தலைவாரிக்கொள்ளும்போதும் அந்தக் கரைசலில் சீப்பைத் தோய்த்துத் தோய்த்து வாரிக் கொள்ளுங்கள். இப்படி நாள் தோறும் செய்துவந்தால் தலைமயிர் உதிரவே உதிராது.

(அனுப்பியவர்—கே. பி. நாயகம்)




பட்டின சபைத் தலைவர் பேரம்பலம் தமது அலுவலக அறைக்குள் இருக்கிறார். பலர் பல காரணங்களை முன்னிட்டு அங்கு வருவதும் போவதுமாக இருக்கிறார்கள்.

அறைக்கு வெளியே வெகு நேரம் தயங்கி நின்ற நாக முத்து தலைவர் தனியாக இருக்கும் சமயமாகப் பார்த்து உள்ளே நுழைகிறான். "வணக்கம் ஐயா" என்றவாறு மேல் துண்டை எடுத்து கையில் வைத்துக்கொண்டு வணக்கம் தெரிவித்தான்.

தலைவர் நிமிர்ந்து "நாக முத்து! என்ன உதெல்லாம்? இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. நீ வந்த காரியத்தைச் சொல்லு." என்றார்.

---

**சுதந்திரம்**

சுதந்திரம் என்பது உங்களுக்கு வெகுமதியாகக் கொடுக்கப்பட்ட ஒரு விஷயம் அல்ல. சர்வாதிகார ஆட்சியிலும் நீங்கள் அந்த சர்வாதிகாரத்துக்கு எதிராகப் போராடினால் போதும். சுதந்திரம் என்பது நீங்களே எடுத்துக் கொள்ளவேண்டிய ஒன்று. பிறரிடம் யாசித்துப் பெறுவதல்ல.

—இக்நாஹி யோஸில் லோன்

---

"ஐயாவுக்குச் சொல்லத் தானே வந்தேன். வந்து... வந்து..." என்றவன் அறைக் கதவுக்கு மேலால் எட்டி எட்டிப் பார்த்தான். பின்னர் மெல்லத் தயங்கியவாறு தலைவரை நெருங்கி வந்தான்...

அந்தச் சமயம் பார்த்து ஓர் இளைஞன் அங்கு நுழைந்து தலைவருக்கு வணக்கம் செலுத்தி நின்றான். அவரும் பதில் வணக்கம் சொல்லிவிட்டு "தம்பி கொஞ்சம் இரும் நாக முத்துவைக் கவனித்துவிட்டு வருகிறேன்" என்றார்.

அதற்கிடையில் நாகமுத்துவே முந்திக்கொண்டு "இல்லை ஐயா, எனக்கென்ன வேலை, நான் நிற்கிறேன். தம்பிதான் ஏதோ அவசரமாக வந்திருக்கிறார், அவரை முதலில் கவனியுங்கள்" என்று பெருந்தன்மையுடன் சொல்லிவிட்டு அந்த அறையிலேயே ஒரு மூலையில் சென்று ஒதுங்கி நின்றுகொண்டான்.

"அப்படியானால் தம்பி, நீர் சொல்லும்" என்றார் தலைவர். "நான் எதற்குச் சொன்னேன் என்றால் முதல் வந்தவர் நிற்கும்போது உம்மைக் கவனித்தால், அது பாரபட்சமாக நடந்துகொண்டதாக முடியுமல்லவா? ஆனால் நாகமுத்துவே உமக்காக விட்டுக் கொடுக்கும்போது நான் என்ன செய்யமுடியும்?"

நாகமுத்து இடையில் புகுந்து "ஐயா கடவுளைப்போலை தம்பி. பாரபட்சம் உயர்வு தாழ்வு—இதெல்லாம் பார்க்கமாட்டார்" என்றார்.

தலைவர் இளைஞனைப் பார்த்து "அவன் இருக்கட்டும். நீர் சொல்லும் தம்பி." என்றார்.

இளைஞன் தயங்கியவாறு "நீங்கள் தனியாக இருப்பீர்கள்...பேசலாம் என்று வந்தால்...?" சொல்லிவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

"நீங்கள் எது குறித்துப்பேச வந்திருக்கிறீர்?" தலைவர் கேட்டார்.

"கேள்விப் பத்திரம்—ரெண்டர்" அவனுக்குச் சிங்களம் மட்டும் தெரியாதுபோலும்!

"அது பற்றியென்றால்...அது சபை சம்பந்தமான— அலுவலகம் சம்பந்தமான விடயம். அதை இங்கு பேசுவதுதான் நல்லது."

நாகமுத்து குறுக்கிட்டுக் கூறினான். "ஐயா சொல்லுவதும் சரிதான். கந்தோர் குறித்து கந்தோரில்தான் பேசவேண்டும். வீட்டுப் பிரச்சினை என்றால் வீட்டிலே பேசலாம்."

தலைவர் நாகமுத்துவைப் பேசாமல் இருக்குமாறு கண்களால் எச்சரிக்கை செய்துவிட்டு, இளைஞனை நோக்கி "தம்பி நீர் சொல்லும்" என்றார்.

இளைஞன் "அதை இரகசியமாகப் பேசுவதுதான் நல்லது என்று பார்க்கிறேன்'! என்றான்.

## அவரும் இவரும்

பேரறிஞர் பெர்னாட்ஷா ஒரு முறை ஒரு இசை விருந்துக்குப் போயிருந்தார். வயலின் வாசித்தவர் அபஸ்வரமாகப் பொழிந்து கொண்டிருந்தார். பெர்னாட்ஷாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தவர் ஷாவிடம், "வயலின்காரரின் வாசிப்பு எப்படி இருக்கிறது?" என வினவினார். "ஜான் ஆண்டர்ஸனைப் போலவே வாசிக்கிறார்" என்றார் ஷா. "ஜான் ஆண்டர்ஸன் வயலின் வாசிப்பவர் அல்லரே? என்றார் மற்றவர்." "இவரும்தான்!" என்றார் ஷா!

—தகவல் என் மூர்த்தி
நாவலப்பிட்டி.

---

"இரகசியம் என்ன இருக்கிறது? நாங்கள் மக்களுக்குத் தொண்டு செய்யவே வந்திருக்கிறோம். இதில் ஒழிவு மறைவென்று ஏதுமில்லை. நீர் சொல்லும்."

நாகமுத்து குறுக்கிட்டான் "கறுப்பு வியாபாரம் செய்பவர்களிடையேதான் இரகசியம் இருக்கும்."

தலைவர் "நாகமுத்து" என்று அதை அழுத்தமாகச் சொல்வதன் மூலமே அவனை எச்சரிக்கை செய்தார்.

இளைஞன் சொன்னான்: "நான் ஓர் அச்சக உரிமையாளன். நீங்கள் சபையின் அச்சு வேலைகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரியிருக்கிறீர்கள் அல்லவா?"

'ஆம்... அரக்கிட்ட கேள்விப் பத்திரங்கள்."

"அதற்கு எவ்வளவு தொகை கேட்கலாம்? எவ்வளவு கேட்டால் கிடைக்கும்? என்பதைத் தங்கள் மூலமாக அறியலாம் என்று வந்தேன்."

"அதுவா? வரும் கேள்விப் பத்திரங்களில் யார் குறைவாகக் கேட்டிருக்கிறார்களோ அவர்களோடுதான் ஒப்பந்தம் செய்வோம்."

"அது சரி என்னைப்போல் வேறு பலரும் இது சம்பந்தமாக உங்களோடு கலந்து பேசியிருக்கலாம். அதை வைத்துக்கொண்டு நீங்கள் ஓரளவு சொல்லக்கூடியதாக இருக்கும். இந்தக் கேள்விப் பத்திரத்துக்கு எவ்வளவு கேட்டால் போதும் என நினைக்கிறீர்கள்?"

"மிஸ்டர், இதுபோன்ற கேள்விகள் கேட்க இங்கு யாருக்கும் அனுமதி கிடையாது. வேலையின் விவரங்களை வேண்டுமானால் இங்கிருந்து பெற்றுக் கொள்ளலாமே தவிர, இது போன்ற விவரங்களை அல்ல."

நாகமுத்து குறுக்கிட்டுச் சொன்னான் "சட்டம் ஒழுங்கு இவைகளைக் காப்பதில் வெள்ளைக்காரன்கூட ஐயாவிடம் பிச்சை வாங்கவேண்டும்."

இளைஞன் நீண்ட மௌனத்தின்பின் மீண்டும் கேட்டான். "சரி சேர். முந்திய முறை இதுபோன்ற கேள்விக்கு எவ்வளவு தொகை கேட்ட பத்திரக்காரருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது என்பதையாவது தெரிவிக்க முடியுமா?"

"தம்பி, இதெல்லாம் அலுவலக இரகசியங்கள். அதை நீர் கேட்பதும் தவறு. நான் சொல்லுவதும் தவறு. சபையின் நிதி நிலைமையைப் பாதிக்கின்ற ஒரு காரியத்தை நான் ஒரு போதுமே செய்யமாட்டேன்."

நாகமுத்து குறுக்கிட்டுச் சொன்னான் "இந்தப் பட்டின சபையால் ஐயா வளராவிட்டாலும் ஐயாவால் பட்டின சபை நிச்சயம் வளரும் தம்பி! ஐயாவைத்தான் நாங்கள் அடுத்த முறையும் சேர்மனாக்கப்போகிறோம்."

இளைஞன் இருக்கையைவிட்டு எழுந்து கேட்டான். "அப்படியானால் ஒன்றுக்குமே முடியாதென்கிறீர்களா? அதற்குப் பதிலாக நான் உங்களுக்குத் தகுந்த கைமாறு செய்யத் தயாராயுள்ளேன்."

தலைவர் ஆத்திரத்துடன் எழுந்து அவன்மீது சீறிப் பாய்ந்தார். "நீர் அத்துமீறிப் போகிறீர். நீர் இப்படிப்பட்டவர் என்று முதலிலேயே தெரிந்திருந்தால் உமக்குக் கதிரையே தந்திருக்கமாட்டேன். நான் நினைத்தால், உந்தத் தவறுக்காக உம்மைக் கம்பி எண்ண வைத்திருக்க முடியும், தெரிந்ததா?" என்றவர் பின்னர் சிறிது தணிந்த குரலில் "தம்பி! நான் இந்தத் தலைவர் பதவிக்கு வரலாம் போகலாம், அதனால் ஒன்றுமில்லை. ஆனால் பதவியில் உள்ளவரை எனது கடமையில் தவறமாட்டேன். உம்போன்றோர் சபையின் நிர்வாகத்தில் தலையிடுவதை அனுமதியாது எச்சரிக்கையாகவும் இருப்பேன். இதனையே சென்ற

---

## இஸ்லாமிய - தமிழ் கலைக்களஞ்சியம்

முதன் முதலாக தமிழில் இஸ்லாமிய—தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் முதலாவது தொகுதி சென்னையில் வெளிவந்துள்ளது. இக் கலைக்களஞ்சியத்தை முஸ்லிம் எழுத்தாளரான எம். ஆர். எம். அப்துல் ரஹீம் தயாரித்துள்ளார். இஸ்லாமிய இலக்கியங்கள் அறிஞர்கள், மன்னர்கள் மதத் தலைவர்கள் இன்னும் பல்வேறு இஸ்லாமிய வரலாறு பற்றிய விபரங்கள் இந்நூலில் தொகுத்துத் தரப் பட்டுள்ளது. இக் கலைக்களஞ்சியம் 3 தொகுதிகளாக வெளிவரவிருக்கிறது. கலைக்களஞ்சியத்தின் முதலாவது தொகுதியை சென்னை ஹைகோர்ட் நீதிபதி எம். எம். 'இஸ்மாயில் சென்னை கோகலே மண்டபத்தில் அண்மையில் வெளியிட்டு வைத்தார்.

வாரம் கொழும்பில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மாநாட்டிலும் உள்ளூராட்சி அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்" என்றார்.

"நாகமுத்து தலையிட்டுக் கேட்டான். "மாநாட்டுக்கு ஐயாவும் போனதாக்கும்...?"

"ஆம். ஆனால் நான் போனாலும் சரி போகாவிட்டாலும்சரி, அமைச்சர் சொன்னாலும் சரி சொல்லாவிட்டாலும் சரி எச்சரிக்கையாகவே இருப்பவன்."

இளைஞன் ஒன்றும் சொல்லாமலேயே வெளியேறிவிட்டான்.

* * *



இளைஞனை அடுத்து, பட்டினசபைத் தலைவர் நாகமுத்துவைப் பார்த்து "இனியாவது நீ வந்த அலுவலைச் சொல்லலாமே" என்றார்.

"நான் ஐயாவைச் சந்திக்கவென்று வீட்டுக்குப்போனேன். ஐயா இப்பதான் கந்தோருக்குப் போயிருப்பதாக அம்மா சொன்னா. அதனால் தான் இங்கே ஓடிவந்தேன். ஐயா மட்டுமல்ல, ஐயாவுக்கு வாய்த்த அம்மாவும்... ஏன் பிள்ளைகளும் தான் தங்கப் பவுணுகள்..."

"நீ வந்தது கந்தோர் சம்பந்தமான அலுவலாகத்தானே அல்லது...? கந்தோர் குறித்து கந்தோரில்தான் பேசவேண்டும். வீட்டுப் பிரச்சினை என்றால் வீட்டிலே பேசலாம்."

"இது கந்தோர் சம்பந்தமானதுதானாக்கும்."

"அப்படியானால் சொல்லு..."

"நீங்கள் கேள்விப் பத்திரங்கள் கேட்டிருக்கிறியளே..."

அவன் முடிக்கவில்லை, தலைவர் குறுக்கிட்டு "ஓகோ, அப்படியானால் நீயும் அது பற்றித் தான் பேச வந்திருக்கிறியா?" என்று நெற்றியைச் சுருக்கினார்.

தலைவரின் நெற்றிச் சுருக்கத்தைக் கவனித்தவன் "ஐயாவுக்கு நெற்றியில் மூன்று சுருக்கங்கள் விழுகிறது. அப்படி விழுவது மிகவும் நல்லது என் பார்கள்" என்றான்.

"கேள்விப் பத்திரம் சம்பந்தமாக வந்தாய் என்றால்—அதுவும் இதற்குமுன் வந்தவர் கேட்டது போன்ற விவரங்களை அறிய வந்தாயானால் அவருக்குக் கொடுத்த பதில்தான் உனக்கும்."

"ஐயா, நான் வந்தது வேறு கேள்விப் பத்திரம் குறித்துப் பேசுவதற்கு."

"சரி பேசு."

"நீங்கள் பட்டின சபைக்கென ஒரு நூல்நிலையம் அமைக்கப்போவதாகவும், அதற்கான கட்டட வேலைகளுக்குக் கேள்விப் பத்திரங்கள் கேட்டிருக்கிறீர்கள்..."

"அதுவும் அரக்கிட்ட கேள்விப் பத்திரங்கள் மேலும் வேலை விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் செயலாளரைக் கேட்டுக்கொள்ளலாம்" — தலைவர் கடுமையான குரலில் சொன்னார்.

"ஐயா மெல்லப் பேசுங்கோ யாருக்காவது கேட்டாலும்..."

"கறுப்பு வியாபாரம செய்பவர்களிடையேதான் இரகசியம் இருக்கும்."

"அந்தக் கட்டட வேலைகளுக்கு பதினைந்தாயிரம்தான் கேட்கலாம். எந்தக் கொந்தராத்துக்காரரும் ஏறக்குறைய அந்தத் தொகையைத்தான் கேட்க முடியும்"

"அதெல்லாம் உன் விருப்பம். நீ எப்படியும் கேட்கலாம்."

# ருஷ்ய கவிதை வடிவில் திருக்குறள்!

தமிழ் மறையான திருக்குறள் 1964-ம் ஆண்டு ருஷ்ய மொழியில் உரை நடையில் முதன் முதலில் மொழிபெயர்க்கப்பட்டது. இப்போது குறள் தமிழில் இருப்பதைப் போலவே ருஷ்ய மொழியிலும் கவிதை நடையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இப்ராகி மோவ் என்ற ருஷ்யர் இதை மொழிபெயர்த்துள்ளார். தமிழ் நாட்டைச் சேர்ந்த பூர்ணம் சோமசுந்தரம் மாஸ்கோவில் மொழி பெயர்ப்பாளராக இருக்கிருர். இப்ராகி மோவுக்கு பூர்ணம் சோமசுந்தரம் திருக்குறளைத் ருஷ்யமொழியில் மொழிபெயர்ப்பதற்குத் துணை புரிந்துள்ளார். தமிழ் — ருஷ்ய மொழி, ருஷ்ய மொழி — தமிழ் அகராதிகளைத் தயாரித்து வரும் பூர்ணம் சோமசுந்தரம்தான்.

ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள திருக்குறள் 25,000 பிரதிகள் வெளியிடப் பட்டன. அத்தனையும் விற்பனையாகிவிட்டன. இந்நூலுக்கு இன்னும் ஏகப்பட்ட கிராக்கி உள்ளது.

குறட்பாக்களுக்கு விளக்கமளித்து குறளோவியம்போல போப — லாவ்ஸ்கி என்ற ஓவியர், ஓவியங்கள் தீட்டியுள்ளார். சிறப்பு மிக்க ஓவியங்களுக்காக இவருக்கு நேரு விருது வழங்கப் பட்டுள்ளது.

---

"நான் சொல்லவந்தது என்னவென்ருல் நான் அந்தத் தொகைதான் கேட்கப்போகி றேன். ஆனுல் வேறு கொந்த ராத்துக்காரர்கள் உங்களைக் கேட்டால் நான் பத்தாயிரம் தான் கேட்டதாகச் சொல்ல வேணும்."

"ஐயா கடவுளைப் போலே. பாரபட்சம், உயர்வு-தாழ்வு இதெல்லாம் பார்க்கமாட் டார்."

"அப்படியானுல் ஏனைய கொந்தராத்துக்காரர்கள் எல் லாரும் 'நாகமுத்து ஒரு படு முட்டாள். பத்தாயிரத்தில் எப்படி அந்த வேலையைச் செய் வான் பார்ப்பம்' என்று பேசா மல் இருப்பார்கள். அல்லது ஒன்பது ஒன்பதரை என்று கேட்டு தாங்களே அழிந்து போவார்கள்."

"சட்டம், ஒழுங்கு-இவைக ளைக் காப்பதில் வெள்ளைக் காரன்கூட ஐயாவிடம் பிச்சை வாங்கவேண்டும்"

"ஆனுல் அவர்கள் எல்லாரும் கடைசியில் ஏமாந்து போவார் கள் பதினைந்து கேட்ட என் னேடு நீங்கள் ஒப்பந்தம் செய்துகொள்வீர்கள். அந்த வேலையால் கிடைக்கும் இலா பத்தில் உங்களுக்கும் பங் குண்டு."

"இந்தப் பட்டினசபையால் ஐயா வளராவிட்டாலும் ஐயா வால் பட்டினசபை நிச்சயம் வளரும்" தலைவர் பேரம்பலம் முடிவாகச் சொல்லிவிட்டு எழுந்தார்.

நாகமுத்து அவரை முந்திக் கொண்டு வெளியே சென்ருன். "அடுத்த இலச்சனிலை இவரை ஒருகை பார்க்காவிட்டால் நான் நாகமுத்து அல்ல" அவன் வாய் முணுமுணுத்தது.

(யாவும் கற்பனை)

---

## கடவுள் மீது வழக்கு!

அமெரிக்காவைச் சேர்ந்த திருமதி பெடென்டா என்ற பெண்மணி, கடவுள்மீது ஒரு வழக்கு தொடர்ந்தார். மின்னல் வீச்சு அவரது வீட்டைப் பாழாக்கி விட்டது என்பதே, அவரது வழக்கு!!

இதனை விசாரணை செய்த நீதிபதி ரசல் ஈடென்சி, அந்த அம்மையாருக்கு நஷ்டஈடாக கடவுள் ஒரு லட்சம் டொலர் தரவேண்டுமென தீர்ப்பு வழங்கினுர்!

ஆச்சரியமடைந்த பத்திரிகையாளர்கள் நீதிபதியிடம், எப்படி இந்தப் பணத்தை கடவுள் கொடுப்பார் என்று கேட்டனர்.

"அது மிகவும் எளிது, உள்ளூர் மாதாகோவில் பொறுப்பாளர்கள் கொடுப்பார்கள். அவர்கள்தானே, பூமியில் கடவுளின் அமைச்சர்கள் என்று கூறிக்கொள் கின்றனர். பின் என்ன? அவர்கள் தான் இந்த நஷ்ட ஈட்டை கொடுக்கவேண்டும்" என்று சொன்னுர்.

ஆதாரம்:- இந்திய சஞ்சிகை.

## இலட்சியவாதி!

இலட்சியவாதி மற்ற வர்களிற்காக தான் பல இன்னல்களை அனுபவிக் கிருன். இலட்சியமற்ற வனே தனக்காக மற்ற வர்களை இன்னல்படுத் துகிருன். —யாரோ.

---



# தேனாடு

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்

பொன் மணிக் கதிரவன்
பொங்கி எழுங் காலை
அழகுப் போதில்
மின் பாளக் கட்டிப்பொன்
கடல்மிசை விழும் ஒலி
வெள்ளம் பொங்கும்!
சின்னமணிப் புட்கள்
சரங்கட்டிப் பொன்வானில்
சிறகடிக்கும்
இன்னெழில் கூத்தாடும்
கலைக்கோயில் போல் நெய்தல்
இருக்கும் நாடு!

அலையோடிப் படைத்த மண்
ஓவியம் அழகுறத்
தோன்றும் ஓர் பால்
வலை தப்பி நண்டோடி
வரைந்த மண் ஓவியம்
திகழும் ஓர் பால்!
கலையோடு கொக்கின் கால்
வைத்த மண் ஓவியம்
இயங்கும் ஓர் பால்
தலையாய கலைக் கோலம்
மலிந்துபோய்த் தரையிலும்
கிடக்கும் நாடு!


வானெக்கும் கடல் வெள்ளம்
ஆடுங் காற்றுடிகள்
வரிசையொக்கும்
கூனற்பாய்ப் படகுகள்
வெண் சீனிக் குவியலைக்
கடல் மண் ஒக்கும்!
கானத்து வெயிற் காயும்
வலைகளோ சிலந்திகள்
காட்டையொக்கும்
தேனெக்கும் வள்ளத்தார்
பாட்டோடு தித்திக்கும்
எழிலார் நாடு!

அடம்பன் பசுங்கொடி
மண்மிசை அழகுப்பாய்
விரித்திருக்கும்!
முடம் போல ஒரு கொக்கு
நெய்தலம் முற்றத்தில்
நின்றிருக்கும்
உடம்பை வளைத்தாடி
வேம்பு கடற்காற்றில்
பயிற்சிசெய்யும்
படம்போல் எழிற் கோலம்
கொண்டுபார்ப்போர் மனம்
பறிக்கும் நாடு!

பேழைப் பணம் கொட்டிப்
பெருஞ் செல்வம் கொட்டிப் பேர்
ஆசையோடும்
கீழைத் திசை காண
உலாவரும் மேனாட்டார்
கிளிகள் போல்வார்
வாழைத்தொடைமாதர்
பாசிக்குடா கடல்
வெள்நீராடித்
தாழைக் குடைநிழல்
தங்கிக் காதலர் மேனி
தழுவும் நாடு!

மச்சங்கள் பதனிடும்
ஆலைதோறும் காலை
சங்குமார்க்கும்!
பட்சிகள் போலாலை
நோக்கித் தொழிலாளர்
பாட்டம் செல்லும்
வச்சிர மார்பன் ஆழி
கடற்றொழிலாளிவாழ்
நிலாமாடத்தின்
உட்சந்தனப் புகை
வீசும் உயர் செல்வம்
உடையார் நாடு!

—வளரும்




**பி**ருந்தாவுக்கு வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்து அலுத்துவிட்டது. எவ்வளவு நாளைக்கு இப்படியே இருப்பது? நாலு இடம் போவதற்கு அவளுக்கும் ஆசை இருக்காதா?

அவள் கணவனுக்கு எந்த நேரம் பார்த்தாலும் வியாபாரத்தைப்பற்றியே பேச்சு. வீட்டிலே இருக்கிறாளே, மனைவி என்று ஒருத்தி; அவளை எங்காவது அழைத்துப் போவோம்: என்று நினைக்கக்கூட நேரமில்லை. அப்படி பிஸினஸில் பிஸி.

மூன்று மாதத்திற்கொரு முறை அல்லது நான்கு மாதத்திற்கொரு முறை என்று சினிமாவுக்கோ அல்லது கோல்பேஸுக்கோ அழைத்துச் செல்வான். அவ்வளவுதான்!

அவளுக்கு திருமணமாகி மூன்று வருடம் ஆகிறது. பிள்ளை குட்டி தொந்தரவு கிடையாது. வீட்டில் பிருந்தாவும், அவள் கணவன் ரமேஷும், வேலைக்கார அம்மாளும் தான்.

அவளது ஓய்வை போக்க கதைப்புத்தகங்கள்தான் கிடைத்தவை. ஓய்வு நேர வீட்டு வேலைகளான தையல், பின்னல் போன்றவைகளையும் செய்வதுண்டு. அதைவிட்டால் ஜன்னலே தஞ்சம். ஜன்னலுக்கருகில் அமர்ந்தபடி வீதியைப் பார்த்து பொழுதை போக்குவதுண்டு.

தோளோடு தோள் சேர்ந்து போகும் ஜோடிகளையும்; ஒரு குடையின்கீழ் இருவராகச் செல்லும் ஜோடிகளையும் பார்க்கும்போது, மனதுக்குள் ஒரு 'கிளு கிளு'ப்பு.

ஒருமுறை அவள் சிநேகிதி லதா வந்திருந்தாள். லதாவும் திருமணமானவள் அவள் கணவன் வெளியில் அழைத்து போவதைத் தவிர லதா தன் தாயோடும் அடிக்கடி வெளியில் செல்வதுண்டு.

"ஏன்டி, நீ வீட்டுக்குள்ளேயே கிடக்கிறாயே, உனக்கு போரடிக்காதா?" என்றாள் லதா.

ஆயிரம் இருந்தாலும் கொண்டவனை விட்டுக் கொடுக்க முடியுமா?" அவருக்கு எந்த நேரமும் ஓய்வில்லாத வேலையடி. எங்கே போக; எங்கே வர?" என்றாள் பிருந்தா.

"ஒரு புதுப்படம் ரிலீஸாகி இருக்கிறது. வருகிறாயா?"

ஆசை யாரை விட்டது? பிருந்தாவுக்கு அதை விட்டால் சந்தர்ப்பமில்லை. ஏனெனில் அவள் கணவன் ரமேஷ் வியாபார விஷயமாக வெளியூர் சென்றிருந்தான். வருவதற்கு மூன்று நாட்கள் செல்லும். அதனால் லதா சொன்னதும் 'சரி' என்று ஒப்புக்கொண்டாள். நாளை, பகல் காட்சிக்கு செல்வதாக முடிவு செய்யப்பட்டது.

* * *

நன்றாக டிரஸ் செய்துகொண்டாள். வேலைக்கார அம்மாளிடம் சொல்லிவிட்டு லதாவோடு புறப்பட்டாள் பிருந்தா.

லதாவுடன் அவள் அம்மாவும் வந்திருந்தார். ஒரு டாக்ஸியைப் பிடித்து புறப்பட்டனர்.

படம் முடிந்துவிட்டது. அந்த நேரம் பார்த்தா அவள் கையிலிருந்த மோதிரம் சேலையில் மாட்டிக் கீழே விழவேண்டும்! ஆசனத்தில் அமர்ந்திருந்தவர்கள் அனைவரும் ஒருவர்பின் ஒருவராகச் சென்று கொண்டிருந்தனர். லதாவும் அம்மாவும் கூட்டத்தோடு போய்க்கொண்டிருந்தார்கள். மோதிரத்தை தேடி பிடித்துக்கொண்டு போகலாம் என்று மோதிரத்தை தேடும் முயற்சியில் ஈடுபடலானாள் பிருந்தா.

மோதிரத்தை தேடிப் பிடிக்க போதுமென்றாகிவிட்டது. ஒருவாறு அதை கையிலணிந்து கொண்டு தியேட்டரை விட்டு வெளியே வந்தாள். அங்கே லதாவையோ அவள் அம்மாவையோ காணவில்லை. அவர்கள் பிரிந்தாவுக்காகக் காத்திருந்துவிட்டு அவளைக் காணாததால் போய்விட்டனர்.

பிருந்தாவுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. அவள் இப்படி தனியாக வந்து பழக்கமில்லையாதலால் ஒருவித பயம் கவ்விக்கொண்டது.

வீதியில் அவளொருத்தி மாத்திரம் தனியாக நின்று தவித்துக்கொண்டிருப்பது போன்ற பிரேமை. வீட்டுக்குள்ளே இருந்தவளுக்கு தனியாக வெளியே வர நேர்ந்தால்

# தீபாவளி பிறந்ததடா!

இன்னல்கள் ஓடிட
இன்பங்கள் நாடிட
எண்ணங்கள் கூடிடவே-எங்கள்
எண்ணங்கள் கூடிடவே—ஒரு
வழி பிறந்ததடா—தீபா
வளி பிறந்ததடா!

அன்பு சுரந்திட
அமைதி விரிந்திட
பண்பு பரந்திடவே—தமிழர்
பண்பு பரந்திடவே—ஒரு
வழி பிறந்ததடா—தீபா
வளி பிறந்ததடா!

அருள் பொலிந்திட
அறம் மலிந்திட
இருள் அகன்றிடவே—நெஞ்ச
இருள் அகன்றிடவே—ஒரு
வழி பிறந்ததடா—தீபா
வளி பிறந்ததடா!

அதர்மம் அழிந்திட
அகிம்சை விளைந்திட
இதயம் மகிழ்ந்திடவே-எங்கள்
இதயம் மகிழ்ந்திடவே—ஒரு
வழி பிறந்ததடா—தீபா
வளி பிறந்ததடா!

வஞ்சம் மறைந்திட
நெஞ்சம் நிறைந்திட
பஞ்சம்குறைந்திடவே-கொடும்
பஞ்சம் குறைந்திடவே—ஒரு
வழி பிறந்ததடா—தீபா
வளி பிறந்ததடா!

—செ. சிவானந்ததேவன்

---

இதுதான் கதி, என்று எண்ணிக் கொண்டாள்.

அவளுக்கு ஏன் வந்தோமென்றாகிவிட்டது. வீதியில் அவள் கணவனுக்கு தெரிந்த நண்பர்களோ அல்லது சொந்தக்காரர்களோ கண்டனர் என்றால் என்ன நினைப்பார்கள்? 'உன் மனைவியை தனியாக ரோட்டில் கண்டேன்! என்று அவனிடம் போய் அவர்கள் சொன்னால் அவன்தான் என்ன நினைப்பான்? தன் மனைவி ஓர் ஊர் சுற்றி என்று நினைக்க மாட்டானா?

கணவனுக்கு தெரியாமல் குடும்பப் பெண்ணான அவள் இப்படி வந்தது தவறு! ஒரு குடும்பப் பெண்ணுக்கு என்ன வேண்டிக் கிடக்குது? புதிய படம் பார்க்க!

மூன்று மாதத்திற்கொரு முறை கணவனோடு வெளியே செல்வதாயினும் அதில் எவ்வளவு பெருமை. இப்படி நடு வீதியில் நின்று தவிப்பதை விட...! அவளுக்கு என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை.

எப்படியோ ஒரு டாக்ஸி வந்து அவளருகில் நின்றது. அதில் ஏறிக்கொண்டு தன் இருப்பிடத்தைத் தெரிவித்தாள் பிருந்தா.

இப்போதுதான் நிம்மதி பெருமூச்சு. இனி வீடு போய் சேர்ந்தால் போதுமென்றானது!

அவள் வீடு இருக்கும் வீதிக்குள் டாக்ஸியை திருப்பச் சொன்னாள். ஆனால் டாக்ஸிகாரனோ அப்படி செய்யாமல் நேரான வழியில் செலுத்தலானான். 'இது என்னடா பெரிய தொல்லை!' அவள் எவ்வளவு சொல்லியும் அவன் கேட்கவில்லை.

அவளுக்கு தான் வாசித்த சிறுகதை ஒன்றின் நினைவு வந்தது. அதில் இப்படித்தான் ஒரு டாக்ஸிகாரன் ஒரு கன்னிப் பெண்ணைக் கடத்திச்சென்று விடுகிறான்.

ஐயய்யோ! அப்படியான நிலை ஏற்பட்டால்... பயம் நன்றாகவே ஆட்டிப்படைத்தது.

தனக்கு இதுவும் வேணும்; இன்னமும் வேண்டும். இப்படி தவறு செய்ததற்கு ஆண்டவனே தண்டனை வழங்கி விட்டான். 'முருகா! என்னைக் காப்பாற்று.'

டாக்ஸி அவள் வீட்டையும் கடந்து சிறிது தூரம் வந்துவிட்டது. நல்ல வேளையாக வாகனப் போக்குவரத்தை நிறுத்தும் சிவப்பு லைட் விழுந்துவிட்டதால் டாக்ஸியும் நின்றது.

இதுவே சமயமென்று டாக்ஸி கதவைத் திறந்தபடி ரோட்டில் இறங்கிவிட்டாள். பிருந்தாவின் சேலையிலும் கழுத்தில் அணிந்திருந்த நெக்லஸிலும் கண்வைத்திருந்த டாக்ஸி டிரைவருக்கு அன்று நாலு ரூபாய் நஷ்டம்.

விடுவிடென்று எதையும் சட்டைசெய்யாமல் நடந்த பிருந்தா, அவள் வீடு இருக்கும் வீதிக்குள் புகுந்துவிட்டாள்.

வீட்டை அடைந்து கதவைத் தட்டவும், கதவை திறந்த வேலைக்கார அம்மாளுக்கோ பிருந்தாவின் நிலை புரியவில்லை. என்ன நடந்தது எஜமானிக்கு?

பிருந்தா தன் அறையை அடைந்து கதவை சாத்திக் கொண்டாள். அவளுக்கு ஓய்வு தேவை. அவளது நெஞ்சின் படபடப்பு அடங்க வெகு நேரம் சென்றது. முருகன்தான் காப்பாற்றினார்.

அப்பாடி!

பகல் ஷோவாம்! பகல் ஷோ! இதற்கெல்லாம் ஆசைப்பட்டுப் போய்தான் மோசம் போகப் போனேன். இனிமேல் இதை மட்டுமல்ல இப்படி போவதையே மறந்துவிடவேண்டும்.

இப்படி ஆசைப்பட்டு அவமானப்படுவதைவிட வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பது மேலாகப்பட்டது.

(கற்பனை)

---

## கலைஞரும் சுவைஞரும்

கலைஞரும் சுவைஞரும் என்ற புதிய அம்சத்தை சுடரில் விரைவில் ஆரம்பிக்கவிருக்கிறோம். இப்பகுதியில் சுடர் வாசகர்களேதங்களுக்கு விரும்பிய எழுத்தாளரையோ கலைஞரையோ செவ்வி காணலாம்.

விபரங்களை அடுத்த இதழில் பாருங்கள்!

# நிலைக்கண்ணாடியின் நிலை!

— செ. குணரத்தினம் —

**குட்டிக் கதை**

முடிவெட்டிக்கொள்ளும் நிலையமொன்றில் மாட்டப்பட்டிருந்த நிலைக்கண்ணாடியை அதன் பக்கத்திலே கிடந்த சீப்பு பார்த்துக் கேட்டது—

"நண்பரே, நானும் வெகு நாட்களாகப் பார்த்துக் கொண்டு வருகிறேன். உனக்கு முன்னால் வந்து நிற்கும் எல்லோருமே போகும்போது தங்களையெல்லாம் அழகர்கள் என்று எண்ணிக்கொண்டு தானே போகிறார்கள். ஆனால் பலரைப் பார்த்தால் எனக்கு அப்படித் தெரியவில்லையே! எதற்காக அவர்களையெல்லாம் நீ அழகானவர்களாக அவர்களுக்குக் காட்டிக் கொண்டிருக்கிறாய்! இதன் மர்மம்தான் என்ன?"

இதைக் கேட்டதும் கண்ணாடி கலகலவென்று பலமாகச் சிரித்தது.

"நண்பா, மனிதர்களைப் பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாது. அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தங்களை இகழ்பவர்களைவிட புகழ்பவர்களையே பெரிதும் மதிக்கிறார்கள். புத்தி குறைவான ஒருவனைப் பார்த்து, உனக்குப் புத்தியில்லையென்றால் அவனுக்கு கோபம் பொத்துக்கொண்டு வரும். அப்படிச் சொல்லும் எவரையும் அவன் மதிக்கமாட்டான். ஆனால் அவனை வேண்டுமென்றே, "உன்னைப் போல அறிவாளி இந்த உலகத்தில் எவருமேயில்லை" என்று சொன்னால் அவனுக்குவரும் ஆனந்தமோ அளவிடமுடியாது. அதுமட்டுமல்ல அப்படிச் சொல்பவர்களை காலமெல்லாம் மறக்கவும் மாட்டான். இப்படிச் சொல்லத் தெரியாமல் உண்மையைச் சொல்லும் மனிதர்கள்தான் இன்று எல்லோரையும் வெறுத்து உலகத்தில் தனிமரமாகத் திரிகிறார்கள். நண்பரே, மனிதர்கள், தங்களைப் பற்றி பிறர் என்ன சொல்லவேண்டுமென்று விரும்புகிறார்களோ— எப்படி நினைக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்களோ அதை அறிந்துவைத்துக்கொண்டு அதற்கேற்றபடி எவன் நடந்துகொள்கிறானோ அவனைத் தான் இந்த உலகம் கட்டாயம் மதிக்கும். வீண் புகழ்ச்சிக்கு மதிப்புக் கொடுக்கும் நாடு நண்பா இந்த நாடு!

சீப்புக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. "சே என்ன உலகம்! என்ன மனிதர்கள்! நண்பரே! இவ்வளவு கேவலமான உலகமா இந்த உலகம்! அதுசரி. நீ எதற்காக எல்லோரையும் அழகானவர்களாகக் காட்டுகிறாய் என்று சொல்லவில்லையே!"

"நான் சொன்னதை புரிந்து கொள்ளவில்லையென்று நினைக்கிறேன். நண்பா நான் அழகானவர்களை அழகானவர்களாகவும் அழகில்லாதவர்களை அப்படியே அழகில்லாமலும் அவர்களுக்குக் காட்டினால் என்னைத் தினம் தினம் வந்து தரிசித்துப்போகும் மக்களின் தொகையல்லவா குறைந்துவிடும். இதனால் உலகத்தில் எனக்கிருக்கும் செல்வாக்கும் அடியோடு நின்றுவிடுமே! அதனால்தான் நண்பா நான் எல்லோரையும் அழகானவர்களாகக் காட்டுகிறேன். உண்மையைச் சொல்லி நேர்மையாக இந்த மனிதர்களோடு வாழவே முடியாது."

"எல்லோரையும் அழகானவர்களாக அவர்களுக்குத் தெரியும்படி காட்ட உன்னால் எப்படி முடிகிறது? எனக்கு அந்த மர்மத்தைச் சொல்ல மாட்டாயா?"

"உஸ்... அது எனக்கும், கடவுளுக்கும் தெரிந்த ரகசியம்! தயவுசெய்து இதை மட்டும் என்னிடம் கேட்காதே. பிறகு இந்த மனிதர்களின் காதுகளில் விழுந்துவிட்டால் என்னை உடைத்து நொருக்கிவிடுவார்கள்!" இப்படிச் சொல்லிவிட்டு சீப்பைப் பார்த்து மறுபடியும் சிரித்தது அந்த நிலைக் கண்ணாடி. சீப்பும் எதுவும் பேச முடியாமல் அதன் முழுப் பற்களையும் காட்டிக்கொண்டு நிலைக்கண்ணாடியின் பக்கத்திலே கிடந்து சிரித்தது.

---

### சாதனை

நேற்றைய எம்மவரின் தவறுகட்காகவும், நாளைய சந்ததியினரின் ஏற்றத்திற்காகவும் இன்று நாம் அனுபவிப்பது வேதனையல்ல! அது சாதனை!

—யாரோ.

---

கணைகள்

### சாபம்

முத்தெனும் அரிசியோடு மண் கலப்பார்
முழுக்கல் பருப்போடு கலப்பார்
சத்துள்ள பாலோடு நீர் கலப்பார்
சர்க்கரை தூசோடு கலப்பார்
பத்தும் பலதும் வடையோடு கலப்பார்
பழத்தோடு காய்கள் கலப்பார்
இத்தனை கலப்பார் புரட்சி எழுங்கால்
எமனோடு வைகுந்தம் கலப்பார்.

—காசி ஆனந்தன்

## தரத்தில் சிறந்ததும் விலையில் குறைந்ததும்
# அண்ணா தயாரிப்புக்களே.

உங்கள் வாடிக்கை கடைகளிலும்
இலங்கையின் எல்லா கடைகளிலும் கிடைப்பது

அண்ணா கோப்பி
அண்ணா தேயிலை
அண்ணா பற்பொடி
அண்ணா பத்தி
ஜெயந்தி பத்திகளே.

இவற்றின் வெற்றுப் பக்கட்டுகளை அனுப்பி விரும்பிய பரிசை பெற்றுக்கொள்ளுங்கள்.

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:—

# அண்ணா தொழிற்சாலை
இணுவில்.

டெலிபோன்: 7412.

# சுத்தம் சுகம் தரும்

**உங்கள் உடம்புத் தூய்மைக்கு**

நீம் வாசனை சோப்,
மெடிக்கேட்டற் சோப்,
எண்ணெய் முழுக்குக்கு,
ஒலிவ் ஸ்நானப் பவுடர்.

**உங்கள் உடைத் தூய்மைக்கு**

மில்க்வைற் நீல சோப்,
நியூ மில்க்வைற் சோப்,
மில்க்வைற் பார் சோப்,
மில்க்வைற் சலவைப் பவுடர்.

**உங்கள் உறைவிடத் தூய்மைக்கு**

நீம் சுகாதார தூபம்,
இதைத்தணலில்இட்டுப்புகைத்தால்
ஈ, கொசுகு, நுளம்பு, சிலந்தி
ஆகியவை அணுகா.

**விவசாயத் தேவைக்கானவை**

நீமாரொக்ஸ் (நீரில் கரைத்துத் தெளிப்பது)

நீமியா (பசளையாகப் பாவிப்பது)

## மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233.

கிளை: 79, மெசன்ஜர்வீதி, கொழும்பு-12. தொலைபேசி; 36063.




இப்பத்திரிகை 194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12ல் உள்ள சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அதே முகவரியிலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.